விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 07 வெள்ளிக்கிழமை (20.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 153

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# தமிழகத்தில் அ.தி.மு.க வெற்றி முதல்வராகிறார் ஜெயலலிதா

## வலுவான எதிர்க்கட்சியாக தி.மு.க



(சென்னை)

**முன் எப்போதும் இல்லாத அளவிலான எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த தமிழக சட்ட சபைத் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின. இதன்படி தேர்தலில் அதிகப்படியான தொகுதி வெற்றிகளுடன் தமிழகத்தில் மீண்டும் அ.தி.மு.க ஆட்சி அமைக்கின்ற நிலையில் ஆறாவது முறையாக மீண்டும் முதலமைச்சராக ஜெயலலிதா பொறுப்பேற்க உள்ளார்.**

தமிழகத்தில் புதிய சட்டசபைக்கான உறுப்பினர்களை தெரிவு செய்ய மே 16-ம் திகதி தேர்தல் நடைபெற்றது.

அதிகளவு வன்முறைக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக அரவக்குறிஞ்சி மற்றும் தஞ்சாவூர் தவிர 232 தொகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 65 ஆயிரத்து 486 வாக்குச்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜெயலலிதாவுக்கு விக்கி பாராட்டு

(யாழ்ப்பாணம்)

ஜெயலலிதா தமிழ் மக்களுக்காக பல விதமான நன்மைகளை செய்வார் என்பதில் சந்தேகம் இல்லை என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழக தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதலமைச்சரான செல்வி ஜெயலலிதாவுக்கு வாழ்த்து தெரிவிக்கும் போதே

24ஆம் பக்கம் பார்க்க....

## வெசாக் நிகழ்வு நாளை ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் வெசாக் தின நிகழ்வுகள் நாளை 21ஆம் திகதியும் நாளை மறுதினம் 22 ஆம் திகதியும் வேம்படி வீதி மற்றும் யாழ்.பொதுநூலகத்தின் அருகிலுள்ள திறந்தவெளி மைதானத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## நிலச்சரிவில் காணாமல் போனவர்களை உயிருடன் மீட்கும் வாய்ப்புக் குறைவு!

### 180 பேருக்கு மேல் மரணமாகியிருக்கலாம் என அச்சம்



(கொழும்பு)

கேகாலை மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக ஏற்பட்ட இரண்டு பாரிய நிலச்சரிவுகளில், சிக்கி 180 பேருக்கு மேல் மரணமாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மேற்படி நிலச்சரிவில் அரநாயக்க பகுதியில் உள்ள மூன்று கிராமங்கள் முற்றாக நிலத்தில் புதையுண்டுள்ளன. அங்கிருந்த 230 பேர்

23ஆம் பக்கம் பார்க்க....

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)


நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக இன்றைய தினம் வெள்ளிக்கிழமை நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கல்வியமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கரு

24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளுக்கு ஆதரவு!

### பிரித்தானிய தொழிற்கட்சி அறிவிப்பு



(கொழும்பு)


தமிழர்களின் சுய நிர்ணய உரிமைகளுக்கு ஆதரவளிக்கப்படும் என பிரித்தானிய தொழிற்கட்சி அறிவித்துள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைகளை உறுதி

24ஆம் பக்கம் பார்க்க....

## தனது பதவிக்குரிய நடவடிக்கைகளை ஆளுநர் அறிந்து செயற்பட வேண்டும்

### ஊடகங்களின் கேள்விக்கு முதலமைச்சர் பதில்




(யாழ்ப்பாணம்)

ஆளுநர் தனது பதவிக்குரிய நடவடிக்கைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை பற்றி அறிந்து செயற்பட வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயினது செயற்பாடுகள தொடர்பாகவும் அவரை பதவி விலக்க வேண்டும் எனவும் சமீப காலமாக பல தரப்பினரிடம் இருந்து பல்வேறுபட்ட கருத்துக்கள் இருந்து

24ஆம் பக்கம் பார்க்க....

## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்குங்கள்

### கொடையாளர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அரசு முனனெடுத்துவரும் வேலைத்திட்டத்தைப் பற்றி ஜனாதிப்தி மைத்திரிபால சிறிசேன விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில்,

எனது அன்புக்குரிய மக்களின் முன்னால் இவ் அறிக்கையினை முன் வைப்பதற்கான காரணம் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினால் பல பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகளின் காரிணமாக பாதிக்கப்பட்டுள்ள அம்மக்களுக்கு முகம கொடுக்க நேரிட்டிருக்கின்ற துன்பகரமான நிலைமையும் அதையிட்டு அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றியும் அறியத் தருவதற்காகவே ஆகும்.

24ஆம் பக்கம் பார்க்க....

## காதல் வலை வீசி கொள்ளையில் ஈடுபட்டிருந்த இளம் பெண் நேற்று கைது

(யாழ்ப்பாணம்).

யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் ஏமாற்றி இலட்சக்கணக்கில் கொள்ளையில் ஈடுபட்ட இளம் பெண் நேற்று சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 22 வயதுடைய சொந்த முகவரி அற்ற குறித்த பெண் பல்வேறு இளைஞர்களை தொடர்பு கொண்டு காதல் வலையில் வீழ்த்தி எட்டு இலட்சத்திற்கும் அதிகமான பணம், நகைகளை கொள்ளையிட்டு அண்மையில் தலைமறைவானார்.

இதனால் குறித்த பெண்ணினால

24ஆம் பக்கம் பார்க்க....

# வன்னிக்குறோஸ் கலாசார பேரவை நடாத்தும் முல்லை மாவட்ட கலைஞர்களுக்கான போட்டி நிகழ்வுகள்

➤ பண்டார வன்னியன் வரலாற்று நாடகம் ➤ அரிச்சந்திர மயான காண்டம்
➤ சமூக நாடகம்

ஒரே மேடையில் அரங்கேறுகின்றன.

காலம்:-21.05.2016 சனிக்கிழமை
நேரம்:- மாலை 3.00 மணிமுதல் நள்ளிரவுவரை
இடம்:மு/யோகபுரம் மகா வித்தியாலயம்
தலைமை:-சி.நாகேந்திரராசா (அதிபர்) தலைவர் வன்னிக்குறோஸ் கலாசார பேரவை-முல்லைத்தீவு மாவட்டம்
பிரதம விருந்தினர்:-வைத்திய கலாநிதி கௌரவ சி.சிவமோகன் பாராளுமன்ற உறுப்பினர்-வன்னி நிறைவேற்றுப் பணிப்பாளர் வன்னிக்குறோஸ் கலாசார பேரவை, வன்னி.

## பங்கு பற்றும் மன்றங்கள்

### பண்டார வன்னியன் வரலாற்று நாடகம்
1.இயக்குநர் வே.விமலேந்திரா
(பரந்தாமன் நாடக கலாமன்றம்-கற்சிலைமடு)
2.இயக்குநர் திரு.பரமசிவம்
(இராசேந்திரம் குழுவினர்-முல்லைத்தீவு)

### அரிச்சந்திர மயான காண்டம்
1.இயக்குநர் திருமதி புவனா இரத்தினசிங்கம்
(இயலிசை நாடக கலாமன்றம்-முள்ளியவளை)
2.இயக்குநர் க.தயாபரன்
(பரந்தாமன் நாடக கலாமன்றம்-கற்சிலைமடு)
3.இயக்குநர் திரு.க.கோவிந்தராசா
(தமிழ்த்தாய் நாடக கலாமன்றம்-துணுக்காய்)

### சமூக நாடகம்
1.இயக்குநர் க.செல்வராசா (கவிதாலயா நாடக மன்றம்-பெரியபுளியங்குளம்)
2.இயக்குநர் திரு.ம.இராஜகுலசிங்கம் (தமிழ்த்தாய் நாடக கலாமன்றம்-துணுக்காய்)
3..இயக்குநர் சி.வேதவனம் (பரந்தாமன் நாடக கலாமன்றம்-கற்சிலைமடு)

அனைவரும் வருக!
கலை இன்பம் பெறுக!

## நிகழ்வு சிறக்க வாழ்த்துகின்றோம்

அனுசரணையாளர்கள்

செ.ரமேஸ் அதில்சன் ரெக்ஸ் மல்லாவி, சி.மனோன்மணி யோகபுரம் மல்லாவி, இ.ஞானபாக்கியம் பாரதிநகர் மல்லாவி, ம.தம்பிராசா பாரதிநகர் மல்லாவி, இ.கிருபாகரன் உயர்ச்சி புத்தகசாலை மல்லாவி, சு.சுபநேசன் ஒட்டறுத்தகுளம், து.ஜேசுதானந்தர் வளநகர், இ.நிக்சன் வளநகர், ஜ.சிவரூபன் யோகபுரம் மத்தி, இ.தர்மசீலன் பனங்காமம், தி.சோதிலிங்கம் முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை மல்லாவி, திரு.குமார் அம்மன் காட்வெயார் மல்லாவி, த.யோகானந்தராசா அனிஞ்சியங்குளம், தி.தர்மலிங்கம் பிள்ளையார் ஸ்ரோர்ஸ் மல்லாவி, திரு ராஜ் உணவகம், ஜே.கஜேந்திரா வாணி உணவகம், த.பிரேமச்சந்திரன் பாரதி நகர்

(சி-4646)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**சின்னட்டி பயிழகன்**
(சின்னத்தம்பி)

எமது நிறுவனத்தில் பணியாளராகக் கடமையாற்றிய அமரர் **சின்னட்டி பயிழகன்** (சின்னத்தம்பி) 19.05.2016 வியாழக்கிழமையன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தாருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உடுப்பிட்டி

எமரால்ட் ஹாட்வெயார்
அன்ட்
மதுஷன் ஸ்ரோர்ஸ்

(4723)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## மரண அறிவித்தல்

### இராமச்சந்திரன் உதயரூபன் (கோபன்)



மீசாலை கிழக்கு, மீசாலையினைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமச்சந்திரன் உதயரூபன் (கோபன்) 18.05.2016 அன்று அகாலச் சாவடைந்துள்ளார்.

அன்னார் இராமச்சந்திரன் சந்திரபூபதி தம்பதியரின் அன்பு மகனும் இராஜகோகுலன், மேகநாதன், மோகனதாஸ் மற்றும் துவாரகா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ராஜி, வக்சலா ஆகியோரின் மைத்துனரும் தனுசா, ஓவியா, தருண்யா, டார்சிகன், கபிஷா ஆகியோரின் சித்தப்பாவும் சின்னத்தம்பி-செல்லம்மா காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் மகாலக்சுமி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20.05.2016 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பகல் 11 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் ஈமக்கிரியைகள் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நாகேந்திரபுரம்
புளியம்பொக்கணை

தகவல்:-வினோசங்சர் (சுபாஸ்) மைத்துனன்

(சி-4643)

## வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான அவசர பொதுக்கூட்டம்

காலம் :- 22.05.2016 ஞாயிறு பி.ப 12.30 மணி
இடம் :- யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

குறிப்பு:-
முதல் நியமன கடிதம், கடமை நிறைவேற்று அதிபர் நியமனக் கடிதம், உயர்கல்விச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் தவறாது கூட்டத்திற்கு சமூகம் தரவும். சமூகமளிக்காதவர்கள் தொடர்பில் சங்கம் கவனத்திற் கொள்ளாது.

(இ)

செயலாளர்
கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம், வடமாகாணம்.

# போர்க்குற்ற விசாரணையின்போது வெளிநாட்டு நீதிபதிகள் அவசியமே

## கனேடிய பிரதமர் வலியுறுத்து



(கொழும்பு)

**இலங்கையின் போர்க்குற்ற விசாரணைகளின்போது வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படவேண்டும் என்று கனேடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோ வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் போர் முடிவடைந்த ஏழாவது நினைவுநாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கையில் போர் முடிவடைந்த நாளை நினைவுகூரும்போது 26 வருட போரினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்டபலரை தாம் சந்தித்த வேளையில் அவர்கள் வெளியிட்ட அதிர்ச்சி தரும் செய்திகளை கூறினார்கள்.

எனவே பாதிக்கப்பட்டவர்களின் காயங்கள் ஆற்றப்படுவதற்காக கடுமையான பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த நிலையிலேயே நீண்ட நிலைத்த சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் அடையமுடியும் என்று கனேடிய பிரதமர் கூறியுள்ளார்.

தமிழர்களை பொறுத்தவரை கனடாவில் பல வெற்றிகளை காணப்பதற்கு நாட்டின் ஒரு அங்கமாக உள்ளனர்.

எனவே இலங்கையின் போர் 7ஆம் ஆண்டு நிறைவில் அவர்களுக்கு தாம் அனுதாபத்தையும் கனேடிய தமிழ் வம்சாவளியினருக்கு ஆதரவையும் வெளியிடுவதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோ குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம். நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சமூகம் எதிர்ப்பார்க்கும் பொறுப்புக்கூறலை அடைய கனடா ஊக்க மளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். (இ)

# இலங்கைக்கு உலக நாடுகள் முக்கிய இடம் வழங்கியுள்ளன

## நிதியமைச்சர் பெருமிதம்



(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பிரதமர் இணைந்து செயற்படுவதன் காரணமாக உலக நாடுகளிடம் இலங்கைக்கு முக்கியமான இடம் கிடைத்துள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அன்று நிதியுதவிகளை வழங்காத நாடுகள் கூட தற்போது நிதியுதவியை வழங்க ஆரம்பித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கி ஒப்பந்தம் தொடர்பான சட்டமூலம் மீதான இரண்டாம் முறை வாசிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போதே நிதியமைச்சர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் இணைவு காரணமாக உலகில் இலங்கை தொடர்பான நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஜப்பான் நேற்று முன்தினம் 3 ஆயிரத்து 500 மில்லியன் டொலர்கள் நிதியுதவியை வழங்கியது.

கடந்த காலத்தில் 7 முதல 8 வீத வணிக வட்டியில் கடன் பெறப்பட்டது.

அன்றைய வெளிநாட்டு கொள்கை இதுவாகவே இருந்தது. தற்போது எமக்கு 0.05 வீத வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. இதனால், 7 வீதம் மீதமாகியுள்ளது. இது வரி செலுத்துவோரின் பணம். இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், ஆயிரம் மில்லியன் டொலர்களை பெற முடியும் எனவும் நிதியமைச்சர் தெரிவித்தார். (இ-5)

# இலங்கைக்கான ஐரோ. தூதுவர் ஆளுநருடன் நேற்றுச் சந்திப்பு



ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலை தீவுகளுக்கான தூதுவரும் பிரதானிகளின் தலைவருமான டேவிட் டலி நேற்றைய தினம் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஆளுநர் கருத்துத்தெரிவிக்கையில், வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வாழ்வாதார உதவித்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் குறிப்பாக மீள்குடியேற்றம் மற்றும் வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் இலங்கை அரசுடன் இணைந்து தாம் செயற்பட விரும்புவதாகவும் மேலும் மத்திய அரசாங்கம் மற்றும் வடமாகாண சபை ஆகிவற்றிற்கிடையில் உள்ள உறவுநிலை தொடர்பிலும் தூதுவர் தம்மிடம் கலந்துரையாடியதாக ஆளுநர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# எகிப்து விமானம் மாயம்

எகிப்து தலைநகர் கெய்ரோவில் இருந்து பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நோக்கிச் சென்ற பயணிகள் விமானம் ரேடாரின் கண்காணிப்பு எல்லையில் இருந்து மாயமானது. எகிப்து அரசுக்கு சொந்தமான தடம் எண்: MS804 எகிப்து ஏர் நிறுவனத்தின் பயணிகள் விமானம் கெய்ரோவில் இருந்து பிரான்ஸ தலைநகர் பாரிஸ் நோக்கிச் சென்றபோது உள்ளூர் நேரப் படி நேற்று முன்தினமிரவு 11.09 மணியளவில் விமான நிலைய ரேடாரின் கண்காணிப்பு எல்லையில் இருந்து மாயமான தாக தெரியவந்துள்ளது. (இ)

## புலிகளின் திருமலை பொறுப்பாளர் எழிலன் உட்பட

# போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்தோரின் விபரம் ஜூன் மாதம் 14ம் திகதி நிச்சயம் சமர்ப்பிக்க வேண்டும்

## முல்லை. நீதிமன்றம் உத்தரவு

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த எழிலன் உட்பட சரணடைந்தவர்களின் விபரம் எதிர்வரும் ஜுன் மாதம் 14 ஆம் திகதி நிச்சயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் இந்த வழக்குடன் தொடர்புடைய 58 ஆவது படைப்பிரிவின் இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சாணக்ய குணரத்ன மன்றில் முன்னிலையாகவேண்டுமென்றும் இல்லாவிட்டால், பிடியாணை பிறப்பிக்கப்படும் எனவும் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இறுதி யுத்தத்தில் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் உட்பட சரணடைந்தவர்களின் விபரங்களை வெளியிடுமாறு எழிலனின் மனைவியான சசிதரன் அனந்தி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு மீதான விசாரணை நேற்றைய தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த விசாரணையில் சரணடைந்தவர்களின் விபரங்கள் அனைத்தும் வெளியிடப்படும் எனத் தெரிவித்திருந்த நிலையில், இன்றைய வழக்கில் மேஜர் ஜெனரல் சாணக்ய குணரத்னவின் சட்டத்தரணி வெளிநாடு சென்றிருப்பதால் முன்னிலையாகவில்லை யென தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், தற்போது தென்னிலங்கையில் வெள்ளப்பெருக்கு காரணமாக சாணக்ய குணரத்னவால் நீதிமன்றில் முன்னிலையாக முடியவில்லை யெனத்தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்போது குறுக்கிட்ட மனுதாரரின் சட்டத்தரணியான ரட்ணவேல், மனுதாரரும் அவர் தொடர்பானவர்களும் தூர இடத்திலிருந்து பேருந்தில் பயணித்து முன்னிலையாகியிருந்த போதிலும் அனைத்து வசதிகளுடன் இருந்தும் எதிர்த்தரப்பினர் மன்றில் முன்னிலையாகவில்லையென ஆட்சேபனை தெரிவித்தார்.

இதனை கவனத்தில் எடுத்த நீதிபதி சம்சுதீன், வழக்கினை எதிர்வரும் ஜுலை மாதம் 14ஆம் திகதி ஒத்திவைத்ததுடன், அடுத்த விசாரணைக்கு மேஜர் ஜெனரல் சாணக்ய குணரத்ன முன்னிலையாகாவிட்டால் பிடியாணை பிறப்பிக்கப்படும் எனவும், அன்றைய தினம் சரணடைந்தவர்களின் விபரங்கள் வெளியிடப்படவேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளார். (இ-4)

# இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இலங்கை சிறப்பாக செயற்படும்

## சங்கா, மஹேல நம்பிக்கை



இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இலங்கை அணி அங்கு சிறப்பாக செயல்படும் என்று இலங்கை அணியின் முன்னாள் தலைவர்களான சங்கக்கார, ஜெயவர்த்தன நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இலங்கை கிரிக்கெட் அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இந்ததொடர் குறித்து ஜெயவர்த்தன கூறுகையில், உண்மையை சொல்ல வேண்டு மென்றால் சில இளம் வீரர்கள் அணியில் இடம் பெற்றிருப்பதால் துடுப்பாட்டத்தில் அனுபவமில்லாமல் இருக்கிறது. ஆனால் இலங்கை அணியின் வர

இருப்பினும் இது, வீரர்கள் அவர்களது திறமைகளை எந்தளவு நம்புகிறார்கள் என்பதை பொறுத்து இருக்கிறது என்று கூறியுள்ளார். அதேபோல் சங்கக்கார கூறுகை யில், உண்மையில் இந்த டெஸ்ட் தொடர் இலங்கை அணியின் துடுப்பாட்டத்துக்கு சவாலானதாக இருக்கும். துடுப்பாட்ட வீரர்கள் 350 ஓட்டங்கள் குவிக்கும் பட்சத்தில் பந்துவீச்சாளர்களுக்கு வாய்ப்பு கொடுக்க முடியும். மற்றபடி பந்துவீச்சு பலமாக இருப்பதாக கூறியுள்ளார். (க)

# டென்னிஸ் வீராங்கனை ஷரபோவாவுக்கு லண்டனில் விசாரணை நடைபெறவுள்ளது



ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவாவுக்கு லண்டனில் விசாரணை நடைபெறவுள்ளது.

ரஷ்ய டென்னிஸ்நட்சத்திரம்மரியா ஷரபோவா கடந்த மார்ச் மாதம் 'மெல டோனியம்' என்ற தடை செய்யப் பட்ட ஊக்கமருந்தை பயன்படுத்தி சிக்கினார். இதனால் இவருக்கு தற் காலிக தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில்சர்வதேச டென்னிஸ் சங்க ஊக்கமருந்து தடுப்பு மையம் ஷரபோவாவிடம் லண்டனில் விசா ரணை நடத்த முடிவுசெய்துள்ளது.

இதில் ஷரபோவா மீதான தவறு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 4 ஆண்டுகள் தடை விதிக்கப்பட லாம். அதேவேளை அவர் தப்பிக்க வும் வாய்ப்பு உள்ளது. அதாவது கட ந்த ஜனவரி முத லாம் திகதிக்கு மேல தான் மெல் டோனியம் மருந்தை எடு த்துக் கொள்ள தடை விதிக்கப்பட்டது.

இதன் பிறகே ஷரபோவா உட் பட 170க்கும் மேற்பட்டோர் இதில் சிக்கினர். ஜனவரி முதலாம் திகதி க்கு முன் இந்த மருந்தை எடுத்துக் கொண்டால் என்ன செய்வது என் பது குறித்த அறிவிப்பு இல்லை. இதனால் ஷரபோவா தப்புவதற்கும் வாய்ப்பு உள்ளது. (க)

# மெஸ்ஸியை விட ரொனால்டோ சூழ்நிலைக்கு ஏற்ற கால்பந்தாட்ட வீரர்

## பயிற்சியாளர் பெர்குசன்

மெஸ்ஸியை விட ரொனால்டோ தான் சூழ்நிலைக்கு ஏற்ற கால்பந் தாட்ட வீரர் என மான்செஸ்டர் யுனைடெட் அணியின் புகழ்பெற்ற முன்னாள் பயிற்சியாளர் அலெக்ஸ் பெர்குசன் கூறியுள்ளார்.

ரொனால்டோ, பெர்குசனின் முன்னாள் சீடன் என்பது குறிப்பிடத் தக்கது. கடந்த 2003 முதல் 2009 வரை மான்செஸ்டர் அணியில் விளையாடிய ரொனால்டோ பெர்கு சன் கீழ் பயிற்சி பெற்றவர்.

அயர்லாந்தில் நடந்த கோல்ப் விளையாட்டு குறித்த நிகழ்வு ஒன் றில் கலந்து கொண்டு பேசிய பெர்கு சன் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது, கால்பந்து விளை யாட்டில் தற்போது சிறந்து விளங் கும் இரண்டு சாதனையாளர்கள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

சமீப காலங்களில் சிறந்த கால் பந்தாட்ட வீரர் யார் என்பதைக் கண்டு பிடிப்பதற்காக, கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் மெஸ்ஸி இருவரும் ஒருவருக்கு ஒருவர் எதி ராக நிறுத்தப்பட்டு வருகின்றனர்.

2009ஆம் ஆண்டு முதல் லா லிகா தொடரில் ரொனால்டோ அல் லது மெஸ்ஸி தான் அதிக கோல




அடித்து வருகின்றனர்.

லா லிகாவில் சிறப்புமிக்க போர் த்துகீசிய நட்சத்திர ஆட்டக்காரரான ரொனால்டோ மான்செஸ்டர் யுனை டெட் அணியில் இருந்து ரியல் மாட்ரிட் அணியில் சேர்ந்துள்ளார்.

மெஸ்ஸி ஒரு அற்புதமான வீரர். அவர் பந்தை கட்டுப்படுத்தும் போது அவர் காலணிகள் அணிந் ததுபோல்தான் இருக்கும், ஆனால், என்னை பொறுத்த வரை மெஸ்ஸி க்கும் ரொனால்டோவுக்கும் இடையே வித்தியாசம் உள்ளது.


மெஸ்ஸி ஒரு பார்சிலோனா வீரர், ஆனால் கிறிஸ்டியானோ ரொனால்டோவால் லிவர்பூல் உள் ளூர் அணிக்காக விளையாடி ஒரு ஹட்ரிக் கோல் அடிக்க முடியும்.

ரொனால்டோவிடம் அனைத்து வகையான திறமையும் உண்டு. அவ ரால் இரண்டு கால்களை கொண்டு பந்தை வலுவாக உதைக்க முடி யும். பந்தை தலையால் கட்டுப்படு த்த முடியும். ஒரு சிங்கத்தின் தைரி யம் அவரிடம் உள்ளது என பெர்கு சன் புகழ்ந்துள்ளார். (க)

# இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கு ராகுல் டிராவிட் பொருத்தமானவர்-கவாஸ்கர்

இந்திய அணிக்கு ராகுல் டிரா விட்டை பயிற்சியாளராக நிய மிக்க முன்னாள் அணித் தலைவர் கவா ஸ்கர் ஆதரவு நல்கியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த டங்கன் பிளட்சரின் (சிம்பாப்வே) ஒப்பந்தம் 2015 உலக கிண்ண போட்டிக ளோடு முடிந்தது.





அதன்பிறகு அணியின் இயக்கு நராக இருந்த ரவி சாஸ்திரி பயிற்சி யாளராக பொறுப்பு வகித்து வருகி றார். அவரது ஒப்பந்தத்தை மேலும் நீட்டிக்க கிரிக்கெட் சபை விரும்ப வில்லை.

புதிய பயிற்சியாளரை கிரிக்கெட் சபை தேடி வருகிறது. சிம்பாப்வே க்கு எதிரான தொடரில் புதிய பயி ற்சியாளர் நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.

இந்த நிலையில் ராகுல் டிரா விட்டை இந்திய அணியின் பயிற்சி யாளராக நியமிக்க முன்னாள் அணித் தலைவர் கவாஸ்கர் ஆத ரவு வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறிய தாவது,

ஓய்வுக்கு பிறகு ஒவ்வொரு வீர ரும் ஏதாவது ஒரு பணியில் ஈடுபடு வதை விரும்புவார்கள். தற்போ தைய இந்திய அணியின் பயிற்சியா ளர் பதவிக்கு முன்னாள் வீரர் ராகுல் டிராவிட் சரியானவர். கிரிக் கெட் சபை அவரை நியமிப்பது பொருத்தமாகும். அவரைவிட சிற ந்த தேர்வு இருக்க முடியாது. இவ் வாறு கவாஸ்கர் கூறியுள்ளார்.

இதேவேளை அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொன்ரிங்கும் இதே கரு த்தை வெளியிட்டுள்ளார். இதுகுறி த்து அவர் கூறியதாவது,

இந்திய அணியின் பயிற்சியா ளர் பதவிக்கு ராகுல் டிராவிட் பொரு த்தமானவர். அவரைவிட சிறந்த வரை கண்டுபிடிப்பது இந்திய கிரிக் கெட் சபைக்கு கடினம் என்று நினை க்கிறேன்.

பயிற்சியாளராக செயல்பட அவர் விரும்பினால் சிறப்பாக செயல்படு வார். அனுபவம் வாய்ந்த அவர் நுணுக்கங்களை அறிந்தவர். 3 வடி விலான கிரிக்கெட்டையும் புரிந்து வைத்திருப்பவர்.

இவ்வாறு பொன்ரிங்கூறியுள்ளார்.

19 வயதுக்குட்பட்ட இந்திய அணி யின் பயிற்சியாளராக இருக்கும் டிரா விட் சீனியர் அணிக்கு பயிற்சியாள ராவது பற்றி எந்த முடிவும் எடுக்க வில்லை.

நியூசிலாந்து முன்னாள் சுழற் பந்து வீரரும், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் பயிற்சியாள ருமான வெட்டோரியின் பெயரை பயிற்சியாளர் பதவிக்கு டெஸ்ட் அணித் தலைவர் விராட் ஹோலி பரிந்துரை செய்துள்ளார் என்பது குறி ப்பிடத்தக்கது. (க)

# மின்கட்டணம் கூடவில்லை பிரதியமைச்சர் பதிலளிப்பு

## வாசுவுடன் வாய்த்தர்க்கம்





(கொழும்பு)

மின் கட்ட்ணப்பட்டியலால், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதியமைச்சர் அஜித் பி பெரேராவுக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு எம்.பி.யான வாசுதேவ நாணயக்காரவுக்கும் இடையில் கணக்கு - வழக்குத் தொடர்பில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதுடன், மின்கட்டணம் கூடவேயில்லை என்று பிரதியமைச்சர் பதிலளித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் புதன்கிழமை வாய்மொழி மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது வாசுதேவ நாணயக்கார எம்.பி, 2015 ஜனவரி மாதம் முதல் மின் கட்டணம் எவ்விதமான முன்னறிவித்தலும் இன்றி அதிகரிக்கப்பட்டுள்ளதா? அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதா உள்ளிட்ட கேள்விகளை கேட்டிருந்தார்.

அந்த கேள்விகளுக்கு பதிலளித்த பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா, 2014 ஆம ஆண்டு செப்டெம்பர் 16 ஆம் திகதிக்கு பின்னர் மின்கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. அப்படியாயின், நுகர்வோர் ஒருவரின் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாத மின் கட்டணம் ரூ.892.40 இருக்கும் போது, பெப்ரவரி மாதக் கட்டணம் ரூ.1308.55 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பாவனையாளரின் மின் கட்டணம் ஒரு மாதத்துக்குள் ரூ.416.15 உயர்வடைந்தது எவ்வாறு என்று வாசு வினவினார்.

இதற்கு பதிலளித்த பிரதியமைச்சர், "உறுப்பினர், அவர்களே, மின் கட்டணப் பட்டியலை சாதாரணமாக பார்க்கும் போது அதிகரித்து இருப்பதாகவே தெரியும். ஆனால், சூத்திரத்தை போட்டுப் பார்த்தால் அது புரியும். அதற்கு கணிதம் தெரிந்து இருக்க வேண்டும். உங்களுக்கு கணிதம் தெரியும் தானே... கோவையை தாருங்கள் கணக்குப் போட்டுப் பாருங்கள்" என்றார். இடைமறித்த வாசுதேவ நாணயக்கார, "பார்க்கும் போதே பட்டியலில் கட்டணம் அதிகரித்துள்ளமை புரிகிறது. இதில், சூத்திரத்தை பார்க்க வேண்டிய தேவை இல்லை" என்றார்.

இதனையடுத்தே இவ்விருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதேவேளை, இறுதியாக் பதிலளித்த பிரதியமைச்சர் மின்கட்டணம் அதிகரிக்கப்படவில்லை, மின்கட்டணத்துக்கு வ்ற், தேசத்தை கட்டியெழுப்பும் வரியும் சேர்க்கப்படவில்லை என்றார். (இ)


# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

(கொழும்பு)

தாயகத்தில் இடம்பெற்ற தமிழின அழிப்பின் 7ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் அனுஷ்டிக்கப் பட்டது.

நினைவேந்தல் நிகழ்வு கிழக்கு பல்கலைகழக கலை, கலாசார மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நண்பகல் நடைபெற்றது.

இதன்போது உயிர் நீத்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி ஈகச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.




கிழக்கு பல்கலைக்கழகத்தில் மூவின சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்றுவரும் நிலையில், இந்த நிகழ்வில் தமிழ் மாணவர் கள் மட்டும் கலந்து கொண்டி ருந்தனர்.

புலனாய்வுத் துறையினர் மற்றும் ஏனையவர்களின் கெடுபிடிகள் அதிகம் காணப்பட்ட போதிலும், நினைவேந்தல் நிகழ்வு மிகவும் எளிமையான முறையில் அமைதியாக உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனைகள் நடைபெற்று நிறைவடைந்தது.

(இ-5)

# சந்தேகத்திற்கிடமாக பயணித்த 7 பேர் கைது

சந்தேகத்திற்கிடமாக ஆட்டோ ஒன்றில் பயணித்த 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஊறுபொக்க- ஈகொட பிரதேசத்தில் வைத்து இந்த நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த ஆட்டோவை சோதனையிட்ட போது அதில் தெய்வசிலைகள் மற்றும் பூஜைப் பொருட்கள் பல இருந்ததாகவும், நோயாளி ஒருவருக்கு தெய்வப் பரிகாரம் செய்து குணப்படுத்துவதற்கே தாம் இதனைக் கொண்டு செல்வதாகவும் சந்தேகநபர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இவர்கள் புதையல் தோண்டுவதற்கே குறித்த பொருட்களை ஆட்டோவில் கொண்டு செல்வதை அறிந்து இவர்களை கைது செய்து மொரவக்க நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியதைத் தொடர்ந்து சந்தேக நபர்களை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## ஐந்தாம் வருட நினைவு நிரை

மண் மகிழ
27
06
1983

### அமரர் இரத்தினம் இதயராசா

திதி: வைகாசி பூர்வபக்க சதுர்த்தசி :– 20.05.2016

கண் கலங்க
16
05
2011

எங்கள் மனத்திரையில் அழியா ஓவியம் நீ!
பொங்கும் குமுறல்களால் எம் நெஞ்சில் உணர்வுத் தீ!
தாங்கொணாத் துயரால் வழியுதே எம் கண்ணில் நீர்!
பாங்கான உன் குறு வாழ்வால் தாழ்ந்ததுவோ எம் சீர்!
சுங்கானாய் எமக்கிருப்பாயென நினைத்தது தான் தப்போ?
ஏங்கியே வாழ்ந்திடும் எம் துயர் தணிவதுதான் எப்போ?
மங்காத எம் இதயதீபத்தின் ஐந்தாம் வருட நிரை
தாங்காதடா நின் பிரிவுத்துயர் எம் வாழ்வுவரை...



தேனாவளவு,
கரணவாய்
கிழக்கு,
கரவெட்டி.

(சி–4611)

உறவுகள்


## இராசி பலன்

20.05.2016
(வைகாசி 07,வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 1.14 மணிவரை
சுவாதி பிற்பகல் 5.07 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
கல்கி பகவான் ஏகத்துவத்தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | புத | சூரி சுக் | |
| கேது | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் ரேவதி, அச்சுவினி | | குரு ராகு |
| | சனி செவ் | சந் | |

**மீனம்** — வளர்ச்சிக்கான வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டிய நாள், உறவினர்கள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், குடும்பத்தில் முன்கோபத்தைக் குறைப்பது நல்லது.

**மேடம்** — வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** — பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், கடன் சுமை குறையும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** — வாகன யோகமுண்டு, பெருமைகள் வந்து சேர பிள்ளையாரை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் குதூகலம் கூடும் நாள், வியாபார விருத்தியுண்டு.

**கும்பம்** — தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், மாலைநேரம் பிரிய மானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கடகம்** — விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளை கடைப் பிடிக்க வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** — கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** — நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், எண்ணிய காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** — பொதுவாழ்வில் புகழ் கூடும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்** — தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம்.

**கன்னி** — உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், பணவரவு திருப்திதரும் வகையில் அமையும்.

# மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வடக்கில் அதிகாரசபை உருவாக்கப்படும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வட மாகாணத்தில் உள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அதிகார சபையொன்று உருவாக்கப்படவுள்ளதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன தெரிவித்துள்ளார்.**



வட மாகாணத்தில் உள்ள மீன் பிடியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்.பொது நூலக வளாகத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். தமது மாவட்டங்களில் உள்ள மீன்பிடியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எமக்கு தெரிவித்திருந்தார்கள். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் வித்தியாசமான பிரச்சினைகள் உண்டு. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தெற்கில் இருந்து வரும் மீன்பிடியாளர்கள் சட்ட விரோதமான மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதால் முல்லைத்தீவில் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர். மேலும் அங்குதெற்கில் இருந்து மீன்பிடிப்பதற்கு வருவதாக முன்பு 78 பேர் அடையாளப்படுத்தப்பட்டிருந்தார்கள் ஆனால் தற்போது 300க்கு மேற்பட்ட மீனவர்கள் அங்கு வந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள் என தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டத்தில் இந்திய இழுவைப்படகுகளால் தொடர்ச்சியாக மீனவருக்கு பிரச்சினை ஏற்பட்டிருப்பதாக தெரிவித்தனர். அதே போன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைதீவு பிரச்சினை தொடர்பாக கூறியிருந்தனர். அதில் கடற்படையினரால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தனர். மேலும் யாழ்.மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினை தொடர்பாக தெரியப்படுத்தப்பட்ட பின்னர் அனைத்து விடயம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இவ் விடயங்கள் தொடர்பாக பரிசீலிப்பதற்கு முதலமைச்சரின் செயலாளர், மீன்பிடி அமைச்சின் செயலாளர், விவசாய அமைச்சின் செயலாள்களை உள்ளடக்கி பேராசிரியர் சூசை ஆனந்தனின் ஆலோசனையின் கீழ் ஒரு குழு அமைத்து மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை உள்ளடக்கி அவற்றின் அதிகாரங்கள் தொடர்பாக பேராசிரியரிடம் இருந்து அறிக்கை ஒன்றை பெறவுள்ளோம்.

அதனைத் தொடர்ந்து வடமாகாணத்துக்குரிய அதிகாரசபையை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்த அதிகார சபைக்கு குறிப்பிட்ட அதிகாரங்களை வழங்கினால் இவை தொடர்பான அதிகாரங்கள் முகாமைத்துவங்கள் அனைத்தும் மேற்குறித்த அதிகாரசபையின் கீழ் இருக்கும். மற்றவர்களின் உள்ளீடுகள் இல்லாமல் போகும்.எனவே அதற்குரிய ஏற்பாடுகள் விரைவில் நடைபெறவுள்ளன.

மேலும் இந்திய இழுவைப் படகுகளின் பிரச்சினை மத்திய அரசுக்குரியது.

அது தொடர்பாக விரைவில் மத்திய அரசுடன் பேசி நடைமுறைச் சாத்தியம் உள்ள தீர்வு ஒன்றினை-பெறுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)








வடக்கு மாகாண சுதேச மருத்துவத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் காரைநகரில் சித்த மருத்துவ மத்திய நிலையத்திற்கான அடிக்கல் நேற்று முன்தினம் நாட்டி வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். 12.5 மில்லியன் நிதியொதுக் கீட்டில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த மத்திய மருந்தக கட்டடத்தின் அடிக்கல் நாட்டுவிழாவில் காரைநகர் அபிவிருத்தி குழுவின் உறுப்பினர்கள், பிரதேச சபையின் முன்னைநாள் தவிசாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், சுதேச மருத்துவ திணைக்களத்தின் மாகாண ஆணையாளர், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:பனிக்கன்குளம் செய்தியாளர்)



இணுவில் பொதுநூலக சனசமூக நிலைய பாலர பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.






இவ் விளையாட்டு விழா நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றூபா உதயரட்ணம்,சிறப்பு விருந்தினர்களாக வலி.தெற்கு உடுவில் சமுர்த்தி மகாசங்க முகாமையாளர் திருமதி ஆனந்தகௌரி ஜெயக்குமார்,யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.குமரன்,கௌரவ விருந்தினர்களாக ஓய்வுநிலை ஆசிரியர் த.வேலாயுதபிள்ளை,ஆசிரியர் திருமதி சக்திரா கந்தசாமி, ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர் இ.இரட்ணசிங்கம், பா.பாலமுரளி ஆகியோர் கலந்து கொண்டனர்.



# வடக்கு மாகாண சுகாதாரத்துறையின் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்



ஆஸ்திரிய நாட்டு தூதுக்குழுவொன்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சரை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளது. இதன் போது வடக்கு மாகாண சுகாதார துறையின் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

இதில் ஆஸ்திரிய நாட்டுப்பிரதிநிதிகள், சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது வடக்கு மாகாணத்தின் வைத்தியசாலைகளின் உட்கட்டுமான அபிவிருத்தி, விசேட வைத்திய பிரிவுகளை தர முயர்த்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆஸ்திரிய மத்திய சுகாதார அமைச்சினூடாக வடக்கு மாகாண சுகாதார அபிவிருத்திக்கு நீண்டகால கடனடிப்படையில் நிதி வழங்க முன்வந்துள்ளது. (இ-281)

## தேசிய இளைஞர் தினம்

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்விவகார அமைச்சானது தேசிய இளைஞர்தினவிழாவினை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து வளமான எதிர்காலத்திற்கான இளைஞர் சக்தி எனும் தொனிப்பொருளில் நடைபவனி ஒன்றினை இவ் வருடம் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் காலை 7.30 மணிமுதல் நடத்தவுள்ளது. (இ

## மணல் பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு தொகுதி மணல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பகிர ங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் வைத்து விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏல விற்பனையில் மணல் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவாக பணத்தினை மட்டும்செலுத்தவேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏலத்தில் மணலைக் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும். அத்துடன் ஏல விற்பனையில் பெற்றுக்கொள்ளும் மணலை அன்றையதினம் உடனடியாகவே நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றப்படல் வேண்டும் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-11

### (19.05.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

01. மலை, காடு, வயல், கடல், ஆறு, குளம்
02. இயற்கை
03. ஆசீர்வதிக்கின்றன.
04. பச்சைக் கம்பளம்
05. ஏதாகிலும் ஒன்று, தேயிலை
06. நீலக், நாற்புறக்
07. அஃறிணை, பலவின்பால், பன்மை, படர்க்கை
08. உயர்திணை, பலர்பால், பன்மை, தன்மை
09. சிறுமி, கதிரை, வந்தோம்
10. குடா, விமானி, பாகன்
11. 1. நான் வீட்டுக்கு போகலாமா?
2. நீர் நாளைக்கு வாரும்
3. உமது பெயர் என்ன?
12. PLEASE BE SILENT
13. BOOK, PENCIL, EGG, FISH
14. 1. அபே ரட்ட லங்காவ
2. அபி கொந்தட்ட தெமில கத்தாக்கரனுவ
15. 1. கடை எத்தனை மணிக்கு மூடப்படும்
2. நீர் எனக்குச் சொல்லித் தருவீரா?
16. முளையில், சிறக்க, சிலையில்
17. 1,2,1
18. 2
19) 2
20) 2
21) 1
22) 1
23) 1
24) 2
25) 1
26) 3
27) 3
28) 2
29) 2
30) 1
31) 1)3000, 2990
2)4567, 5678
3) 1900, 1897
32) 1) 2/6, 3/9
2) 2/4, 3/6
3) 2/8, 3/12
33) நிழற்றிய விடை, 4/6, 3/8, 3/4
34) 1) 475
2) 165
35) 1) 14:00
2) பிற்பகல் 6.00
36) 1) 5,6,9
2) 2,0,2
3) 1,1,1
37) சரியாக நிழற்றிய, 500, 200
38)

| | | | |
|---|---|---|---|
| | | | 90 |
| | | 100 | 190 |
| | 50 | 150 | 240 |
| 150 | 200 | 300 | 390 |

39) 1) கடிக்கலாம்
2) தோசையாக
3) அலை மோதியது
4) நிறைந்திருந்தனர்
5) பேசப்பட்ட
6) எழுதிய
7) தொடர்ந்தது
40) கருத்துள்ள வாக்கியங்கள்.

# புதுவகையான காய்ச்சல் இலங்கையில் பரவலாம்

ஆபிரிக்க நாடான அங்கோலா நாட்டில் பரவியுள்ள ஒரு வகை காய்ச்சல் இலங்கையிலும்பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த காய்ச்சலைப் பரப்பும் "ஈடிஸ்" நுளம்புகள் இலங்கையிலும் காணப்படுவதால் இந்தக் காய்ச்சல் பரவும் வாய்ப்புகள் இருப்பதாக சுகாதார அமைச்சு மேலும்குறிப்பிட்டுள்ளது.எனவே இந்தக் காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு தேவையான ஊசி மருந்தினை பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் பெற்றுக்கொளவது கட்டாயமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 9 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இந்த ஊசி மருந்தினை ஏற்றிக் கொள்ளவேண்டும் என்றும் சுகாதார அமைச்சு மக்களை கோரியுள்ளது.

இந்த ஊசி மருந்தினை இதுவரை ஏற்றிக் கொள்ளாதவர்கள் பொறளையில் உளள வைத்தியபரிசோதனை நிலையத்திற்கு வார நாட்களில் சென்று இதனைப் பெற்றுக் கொள்ள முடியும்என்றும் தெரிவித்துள்ளது.

அத்துடன் குறித்த ஊசியினை ஏற்றிக்கொண்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் இந்தகாய்ச்சலிலிருந்து பூரணமாக சுகமடையலாம் என் றும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் இதனால் வாழ்நாள் பூராகவும் குறித்த காய்ச்சலில் இருந்து பாதுகாப்பு கிடைக்கும்என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# வவுனியாவில் மாபெரும் தொழிற்சந்தை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம் எதிர்வரும்மே 27 ஆம்மற்றும்28ஆம் திகதிகளில் மாபெரும் தொழிற்சந்தை ஒன்றை பம்பை மடுவிலுள்ள வவுனியா வளாகத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், ஆடை தொழிற்சாலை நிறுவனங்கள் உட்பட 30இற்கு மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன.

இந்நிறுவனங்கள் தமக்கு தேவையான தொழில் வல்லுநர்களை பல்வேறு துறைகளில் நேரடியாக தெரிவு செய்து வேலை வாய்ப்புக்களை வழங்கவுள்ளன. இவ் வேலை வாய்ப்புக்கள் பல்வேறு தகைமையுடையவர்களுக்கும் ஏற்ற வகையில் இருக்கும். இந்நிகழ்வானது 27 ஆம் திகதி அனைத்து பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கும் மற்றும் இறுதியாண்டு மாணவர்களுக்கும் 28ஆம்திகதிபல்கலைக்கழகம் சாராத அனைவருக்குமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இலவச தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் இரண்டு நாட்களும் இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் இவ் விரு நாட்களும் இலவச பேருந்து சேவைகள் வவுனியாவிலிருந்து பம்பை மடுவிற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வுகள் இரு நாட்களும் காலை 9 மணி முதல் மலை 4மணிவரை இடம் பெறும் என வளாக முதல்வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன். தெரிவித்தார். மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்கு 077 844 3891 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றார். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை<br>கி.பா:10சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:B.COM/அரச தொழல்<br>தொ.இ: B/5830 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 14செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BSc/ ஆசிரியர்<br>தொ.இ: G/5866 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 45<br>உயரம்: 181cm<br>தகைமை/தொழில்NCAT/அரச தொழில்<br>தொ.இ: B/5831 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 24செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:HND, BA/ஆசிரியர்<br>தொ.இ: G/5867 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 14செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்<br>தொ.இ: B/5833 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 32செவ் 4 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில<br>தொ.இ: G/5870 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி கி.பா: 30<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/Lசுவிஸ் PR<br>தொ.இ: B/5835 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 37செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:HND, BMS<br>தொ.இ: G/5871 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] )


# வவுனியாவில் அடைமழையால் 4 ஆயிரத்து 127 பேர் பாதிப்பு

## இரு நலன்புரி நிலையங்கள் அமைப்பு

வவுனியாவில் மழை காரணமாக 1130 குடும்பங்களைச் சேர்ந்த நான்காயிரத்து 127 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் இரு நலன்புரி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவிததுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் தொடர்ச்சியாக மழை பெய்து வந்த போதும் நேற்று முன்தினம் புதன்கிழமை தெளிவான வானிலை காணப்பட்டது. இருப்பினும் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ள நீர் புகுந்துள்ளதுடன், குளத்து நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மழை காரணமாக இது வரை 1130 குடும்பங்களைச் சேர்ந்த நான்காயிரத்து 127 பேர் பாதிப்படைந்துள்ளதுடன், 32 வீடுகள் முழுமையாகவும் 103 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

மருக்காரம்பளை மற்றும் வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் இரு நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டு 18 குடும்பங்களைச் சேர்ந்த 87 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார். (இ-250)

# மோசமான காலநிலையிலும் திருடர்கள் கைவரிசை

அதிக மழையுடனான காலநிலையினைப் பயன்படுத்திக் கொண்டு திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளநீர் நிரம்பியுள்ள வீடுகள் மற்றும் கடைகள், நிறுவனங்களுக்குச் சென்று திருட்டில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளநீரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து இவ்வாறான முறைப்பாடுகள் அதிகம் கிடைப்பதாகவும் தெரிவித்துள்ள பொலிஸார், இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் உடனடியாக 119 என்ற இலக்கத்தை அழைத்து அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று தமது முறைப்பாட்டினை தெரிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர்கள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்த நிலைமையினை பயன்படுத்திக் கொள்ளும் சிலர் சிறுவர்களை கடத்தல், துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கல் போன்ற செயல்களில் ஈடுபடலாம் எனவும் இது தொடர்பில் பெற்றோர் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்தால் உடனடியாக 1929 என்ற இலக்கத்திற்கு அழைத்து தகவல் தருமாறும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் கூறியுள்ளனர். (இ)

# கிளிநொச்சியில் வெள்ளத்தால் 18 ஆயிரத்து 265 பேர் பாதிப்பு

## மாவட்ட இடர் முகாமைத்துவ தகவலில் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

**நேற்றுக் காலை கிடைக்கப்பெற்ற புள்ளி விபரத்தின் படி 5 ஆயிரத்து 467 குடும்பங்களை சேர்ந்த 18 ஆயிரத்து 265 பேர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய புள்ளி விபரத் தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

கரைச்சி பிரதேசத்தில் - 3 ஆயிரத்து 331 குடும்பங்களை சேர்ந்த 10 ஆயி ரத்து 993 பேரும் கண்டாவளை பிரதேசத்தில் - ஆயிரத்து623 குடும்பங்களை சேர்ந்த 5ஆயிரத்து 841 பேரும் பச்சிலைப்பள்ளியில் - 333 குடும்பங்களை சேர்ந்த 961 பேரும் பூநகரி பிரதேசத்தில் - 180 குடும்பங்களைசேர்ந்த 470 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

10 வீடுகள் முழுமையாகவும், 235 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளதாக புள்ளி விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சீரற்ற கால நிலையால் மூவர் காயமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் 11 இடைத் தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டதாகவும், அதில் கரைச்சி 4 முகாம்களில் 55 குடும்பங்களை சேர்ந்த 198 பேர், மருதநகர் பொது நோக்கு மண்டபம் - 16 குடும்பங்கள் 41 பேர், தாரணி குடியிருப்பு பாலர் பாடசாலை - 16 குடும்பங்கள் 60 பேர், புனித திரேசா பாடசாலை - 13 குடும்பங்கள் 62 பேர், சிவநகர் அ.த.க பாடசாலை - 10 குடும்பங்கள் 35 பேர். கண்டாவளை - 7 முகாம்களில் 260 குடும்பங்களை சேர்ந்த 921 பேர், சிவபுரம் பாலர் பாடசாலை - 59 குடும்பங்கள் 153 பேர், பரந்தன் இந்து மகா வித்தியாலயம் - 28 குடும்பங்கள் 92 பேர், ஆனையிறவு பொது மண்டபம் - 11 குடும்பங்கள் 33 பேர், நாகேந்திரா வித்தியாலயம் - 20 குடும்பங்கள் 62 பேர், புன்னை நீராவி பொது மண்டபம் - 05 குடும்பங்கள் 17 பேர், கல்லாறு தமிழ் வித்தியாலயம் - 51 குடும்பங்கள் 220 பேர், பூநகரி, பச்சிலைப்பள்ளியில் முகாம்கள் இல்லை என அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)




## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு



(மல்லாவி)

கனடா வாழ் புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கான விவசாய வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை புதுக்குடியிருப்பு கைவேலியில் அமைந்துள்ள பெண்கள் கூட்டுறவு அமைப்பினரின் மண்டபத்தில் தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளிற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியிலான விவசாய முயற்சிகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர், அரசாங்கம் மீள்குடியேற்றத்தின் பின்னர் எமது மக்களின் தேவைகளை முற்றுமுழுதாக நிறைவேற்றியுள்ளதாக வெளி நாடுகளுக்கு பொய்ப்பிரசாரங்கள் மேற்கொண்டு எமது மக்களிற்கு வழங்கப்பட வேண்டிய உதவிகளை பெருமளவுக்கு தடுத்து நிறுத்தியது. எவ்வாறான போதும் யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் எமது மக்களின் வாழ்வாதார எழுச்சியானது புலம்பெயர் எமது உறவுகளின் உதவிகளாலேயே சாத்தியப்படுத்தக்கூடியதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் எமது மக்கள் தமக்கு வழங்கப்படுகின்ற உதவிகளை உச்ச அளவில் பயன்படுத்தி தமது பொருளாதார மேம்பாட்டினை அடைந்து கொள்ள வேண்டும். இதுவே அவ்வுதவி புரிந்த எம் புலம்பெயர்ந்த உறவுகளின் எதிர்பார்ப்பாகும் என்றார்.

இந்நிகழ்வில் கனடா வாழ் உறவுகளின் சார்பில் செந்தில் குமரன், புதுக்குடி யிருப்பு பிரதேச ஒளிரும் வாழ்வு அமைப்பினர் மற்றும் துணுக்காய் பிரதேச ஒளிரும் வாழ்வு அமைப்பினரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-15-281)

## வெள்ளத்துடன் நுழைந்த முதலை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் மக்கள் குடியிருப்புக்குள் மழைவெள்ளத்துடன் வந்த முதலை பிரதேச மக்களால் பிடிக்கப்பட்டது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றுள்ளது.

மழை வெள்ளத்துடன் குடியிருப்புக்குள் நுழைந்த முதலை குறித்த பகுதியில் அமைந்துள்ள கிணற்றினுள் விழுந்துள்ளது, விழுந்த முதலையை பிரதேச மக்கள் பிடித்துள்ளனர்.

பலத்த மழை காரணமாக வெள்ளத்துடன் வருகை தந்த முதலை, குறித்த கிராமத்திற்குள் நுழைந்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிடிக்கப்பட்ட முதலையை வன ஜீவராசி திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். (இ)


# வெள்ள அனர்த்தம் குறித்து ஆராய்வு

கிளிநொச்சி மாவட்டத்தில் கனமழை வெள்ளப் பெருக்கினால் அழிவடைந்த வயல் நிலங்கள், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவுவது குறித்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், துறைசார் அதிகாரிகளுடன் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் கலந்துரையாடி ஆராய்ந்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை வெள்ளப் பெருக்கினால் கிளிநொச்சியில் இம்முறை சிறுபோக நெற்செய்கைக்காக விதைக்கப்பட்ட வயல் நிலங்களிலுள்ள நெற் பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக சி.சிறீதரன் எம்.பியிடம் கூறிக் கவலை தெரிவித்துள்ளார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில அழிவடைந்த நெல் வயல்களை விவசாயிகளுடன்நேரில் சென்று பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம் கிளிநொச்சியில் 3500 ஏக்கருக்கும் மேற்பட்ட நெல் வயல்கள் முற்றாக அழிவடைந்துள்ளதாக விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இரணைமடுக்குளத்தினது அணைக்கட்டுப் புனரமைப்பு உட்பட்ட குளப் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றமையால் இம்முறை இரணைமடுவின் கீழான சிறுபோக நெல் பயிர்ச் செய்கை இடம் பெற்றிருக்கவில்லை.



அக்கராயன்குளம், வன்னேரிக்குளம், கல்மடுக்குளம் போன்ற குளங்களின் கீழ் நீரினைப் பெறும் வயல் நிலங்களிலேயே நெற்பயிர்ச் செய்கை இடம்பெற்றிருந்தன. இங்குள்ள நெல்வயல்களே தற்போது பெய்த கனமழை, வெள்ளப் பெருக்குக் காரணமாக அழிவடைந்துள்ளன.

அக்கராயன், ஸ்கந்தபுரம் பிரதேசங்களிலுள்ள பெருமளவான வயல் நிலங்க்ள் முற்றாக அழிவடைந்துள்ளன. அப்பகுதி விவசாயிகள், தாம் கடன்பட்டு செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்கள் வெள்ளப் பெருக்கினால் அழிவடைந்துள்ளதாகவும் இதனால் தாம் செய்வதறியாது கலங்கி நிற்பதாகவும் அழிவடைந்த வயல் நிலங்களை நேரில் சென்று பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனிடம் தமது வயல் நிலங்களைக் காண்பித்துக் கவலை தெரிவித்துக் கலங்கி நின்றார்கள்.

நெல் வயல் அழிவினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் சிறிதரன் எம்.பி, மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் கு.செந்தூரன், கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் ஈ.தயாரூபன் ஆகியோருடன் விவசாயிகளுக்கு உதவுவது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். இக்கலந்துரையாடலின்போது தமிழ்தேசியக் கூட்டமைப்பின் அக்கராயன் பிரதேச ஒருங்கிணைப்பாளர் பொ.கிருபாகரனால் அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகளின் நெல் வயல் அழிவுகள், அதனால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டன.

பாதிக்கப்பட்ட விவசாயிகளது நெல் வயல் அழிவுகள் தொடர்பான விபரங்களை சேகரித்து அறிக்கைப்படுத்தி அவர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றியும் தற்போது அழிவடைந்த பயிர்களுக்குப் பதிலாக உடனடியாகவே மீள் பயிர்ச் செய்கை மேற்கொள்வது தொடர்பிலும் இக் கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மன்னாரில் நினைவேந்தல் நிகழ்வு







மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை முற் பகல் 11 மணியளவில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட வர்களுக்கான ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மலர் அஞ் சலி செலுத்துதல் மற்றும் தீபமேற்றுதல் போன்ற நிகழ் வுகள் இடம்பெற்றன.

முதலில் இறுதி யுத்த த்தின் போது தனது குடும்ப உறவுகள் அனைவரையும் இழந்த சந்திரசேகரன் பிரு ந்தா என்ற சிறுமி சுடர் ஏற்றி அஞ்சலி நிகழ்வை ஆரம் பித்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து இறுதி யுத்தத்தில் தனது கணவனை இழந்த கேதீஸ்வரன் பத் மினி என்ற பெண் மலர் மாலை அணிவித்தார்.

கலந்து கொண்ட அனை வரும் தமது தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தியதோடு, மலர் அஞ்சலியும் செலுத்தி னர்.இதன் போது தமது உற வுகளை இழந்த உறவின ர்கள் கண்ணீர் மல்ல அஞ் சலி செலுத்தினர்.

பின் சர்வமதத் தலைவர் களினால் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டன.குறித்த நினை வேந்தல் நிகழ்வில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோத ராதலிங் கம், உள்ளூராட்சி மன்றங்க ளின் முன்னாள் தலைவர் கள், உப தலைவர்கள், உறு ப்பினர்கள், யுத்தத்தில் பாதி க்கப்பட்டு,உயிர் நீத்தவர்க ளின் உறவினர்கள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதி கள் என நூற்றுக் கணக்கான வர்கள்கலந்து கொண்டு உண ர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தி யமை குறிப்பிடத்தக்கது.(இ-4)

## நலன்புரி நிலையத்திலுள்ள மக்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன



வவுனியாவில் பெய்த மழையின் காரணமாக வவு னியா பிரதேச செயலகப் பிரிவில் 18 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள நிலை யில் அவர்களுக்கான உண வுப் பொருட்களை வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு வழங்கி வைத்தது.

வவுனியா வேப்பங்குளத் தில் அமைக்கப்பட்ட நலன் புரி நிலையத்தில் 9 குடும் பங்களை சேர்ந்த 43 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான சமைத்த உணவு வவுனியா மாவட்ட பிரஜைகள்குழுவினால்நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. இதில் வவுனியா மாவட்ட பிரஜை கள் குழுத் தலைவர் த. சலச லோசன், ஆலோசகர்களில் ஒருவரான வைத்தியர் லவன் உள்ளிட்ட குழுவினர் கல ந்து கொண்டனர். (இ-250)


## தமிழினப் படுகொலைக்கு நீதி கேட்டு ஸ்ராஸ்பூர்க் மாநகரில் கவனயீர்ப்பு



















முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினம் புதன்கிழமை ஸ்ராஸ்பூர்க் ஐரோப்பிய ஆலோசனை சபை முன்றலில் பிற்பகல் 3.30 தொடக்கம் 5மணிவரை நடைபெற்றது. இந் நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் உணர்வுடன் கலந்து கொண்டிருந்தனர். நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கமும் செய்யப்பட்டதுடன் படுகொலை நினைவு சுமந்த பதாகைகளைத் தாங்கிய வண்ணம் சிறுவர் முதல் பெரியவர் வரை மிகவும் உணர்வுடன் நின்றிருந்தனர்.அரசினால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்ற தமிழின அழிப்பை தடுத்து நிறுத்தி, நீதியைப் பெற்றுத் தரவும், அனைத்துலக விசாரணையை முன்னெடுக்கவும் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தரக்கோரியும் உள்ளடங்கிய மகஜர் ஐரோப்பிய ஆலோசனைச் சபையின் பொதுச் செயலரிடம் கையளிக்கப்பட்டது.இறுதியில் தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற முழக்கத்துடன் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு நிறைவுக்கு வந்தது.

# உகண்டாவுக்கான பயணச்செலவை அரசின் தலையில் கட்டிய மகிந்த

கடந்த வாரம்ஒரு காலைப் பொழுது, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் கைத்தொலைபேசி சில தடவைகள் ஒலித்தன. அவர் அப்போது தனது அதிகாரபூர்வ வதிவிடத்தில் இருந்தார். கொழும்பு நகரில் மிகவும் பாதுகாப்பான இடங்களில் ஒன்றான, ஸ்ரான்ட் மோர் கிரசன்ட்டில் அந்த வதிவிடம், இலங்கையின் விமானப்படை மற்றும் இராணுவத் தளபதிகளின் வதிவிடங்களுக்கு நடுவே உள்ளது.

சில காகித வேலைகளில் மூழ்கியிருந்த அவர் அந்த தொலைபேசிக்குப் பதிலளித்தார். அந்த அழைப்பை எடுத்தது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. அவர் தனது உகண்டா பயணத்துக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், பணஉதவி செய்ய வேண்டும் என்று கோரினார்.

"ராஜபக்ஷக்களிடம் இப்போது பணம் இல்லையா?" என்று கேட்டார் மங்கள சமரவீர. அவர்கள் இருவரும் சிரித்தார்கள். அந்த உரையாடல் நீண்டது.

அதன்விளைவாக, மகிந்த ராஜபக்ஷவுக்கு, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், உகண்டா செல்வதற்கான விமானப் பயணச்சீட்டைப் பெற்றுக் கொடுத்தது. கொழும்பில் இருந்து டுபாய்க்கு எமிரேட்ஸ் விமானத்தில் முதல் வகுப்பு இல்லாததால், சாதாரண வகுப்பிலும், டுபாயில் இருந்து உகண்டாவின் என்டபே விமான நிலையத்துக்கு முதல் வகுப்பிலும் பயணம் செய்ய பயணச்சீட்டு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இருவழிப் பயணத்துக்கான அந்த விமானக்கட்டணத்தின் பெறுமதி, 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா. அவருடன் பயணித்த ஏனையவர்களுக்கு அவர்களே விமானக்கட்டணத்தைச் செலுத்தினர்.

கடந்த வியாழக்கிழமை கம்போலாவில் பதற்றத்துக்கு நடுவே இடம்பெற்ற, யொவேரி முசவேனியின் ஆறாவது பதவியேற்பு நிகழ்வில், மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டிருந்தார். அங்குள்ள நீதிமன்றங்கள், எதிர்ப்பு பேரணிகளை நடத்த தடைவிதித்திருந்தன. சிம்பாவேயின் ஜனாதிபதி ரோபர்ட் முகாபே, தன்சானியாவின் ஜனாதிபதி ஜோன் மகுபுலி, தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா, சம்பியாவின் ஜனாதிபதி கட்கர் லுங்கு ஆகியோருடன், மகிந்த ராஜபக்ஷவும் இந்த பதவியேற்பு விழாவில் பங்கேற்றிருந்தனர்.

பதவியேற்பு விழா நடந்தபோது, கம்போலாவை, ஆயுதப் படையினரும், கலகத் தடுப்பு பொலிஸாரும் சுற்றி வளைத்திருந்தனர்.

உகண்டாவின் பிரதான எதிர்க்கட்சியான, ஜனநாயக மாற்றத்துக்கான அமைப்பு, முசவேனி ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டதை அங்கீகரிக்கவில்லை. அவருக்கு 61 வீத வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட, கிசா பெசிக்யேவுக்கு 35 வீத வாக்குகளும் கிடைத்திருந்தன.

தேர்தலைக் கண்காணித்த உள்நாட்டு, வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள், தேர்தல் வாக்கு மோசடிகளுடன் முறைகேடாக இடம் பெற்றதாக தெரிவித்திருந்தனர். இதனை எதிர்த்து நீதிமன்றம் செல்லப் போவதாக அறிவித்த எதிர்க்கட்சி வேட்பாளர், கிசா, அப்போது தொடக்கம் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சி செயற்பாடுகள் குறித்து அறிக்கையிடுவதற்கு முசவேனி அரசாங்கம் தடை விதித்த பின்னர், டுவிட்டர்போன்றசமூக வலைத்தளங்கள் தான், எதிர்க் கட்சியினருக்கு எஞ்சியிருந்தது. அரசின் உத்தரவை மீறும் எந்த ஊடகமும், அனுமதியை இழக்கும் ஆபத்து உள்ளது.

மங்கள சமரவீரவுடனான, தொலைபேசி உரையாடலின் போது, முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில், தமது வெளிநாட்டுப் பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். கடந்த மாதம், மகிந்த ராஜபக்ஷ தாய்லாந்து சென்றபோது, இந்த நெறிமுறை உதவியை கோரியிருக்கவில்லை.

மகிந்தவின் கருத்துக்குப் பதிலளித்த, மங்கள சமரவீர, "உங்களின் ஆட்சிக் காலத்தில் ஹீத்ரோ விமான நிலையத்தில் இருந்து, விடுதிக்குச் செல்வதற்கு எனக்கு தூதரக வாகனம் மறுக்கப்பட்டது" என்று தெரிவித்தார்.

அதற்கு அவசரமாகப் பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ, அது, அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிசின் வேலையாக இருக்கலாம்" என்றார்.

அப்போது, ரோகித போகொல்லாகமவே வெளிவிவகார அமைச்சராக இருந்தார் என்று, மகிந்தவின் கருத்தை மங்கள சமரவீர திருத்தினார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குக் கூட நெறிமுறை உதவிகள் மறுக்கப்பட்டது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமது அமைச்சுக்கு முறைப்படியான வேண்டுகோளை அனுப்புமாறு மங்கள சமரவீர தெரிவித்தார். இதையடுத்து, மகிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட செயலர் உதித் லொக்குபண்டார, வெளிவிவகாரச் செயலர் சித்ராங்கனி வகீஸ்வராவுக்கு கடிதம் எழுதினார்.

அதில் அவர்," கம்போலாவில்,மே.11 முதல், 15 வரையான காலப்பகுதியில் தங்கியிருக்கும் போது ஏற்படும், உணவு மற்றும் தங்குமிடச் செலவுகளைக்கருத்தில்கொள்ளுமாறு கேட்டிருந்தார். அந்த விண்ணப்பம், பரிசீலனையில் இருந்த போது, உதித் லொக்கு பண்டார, மங்கள சமரவீரவைத் தொலைபேசியில் அழைத்தார்.

மகிந்த ராஜபக்ஷ, டுபாய் விமான நிலையத்தில், நான்கு மணிநேரம், என்டபே செல்லும் விமானத்துக்காக காத்திருக்க வேண்டும் என்றும், அதுவரை அவர் டுபாயில் வசதியான ஒரு விடுதியில் தங்குவதற்கான செலவை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்என்றும்கோரினார்.

மரியாதை நிமித்தமாக முன்னாள் ஜனாதிபதிக்கு, விமானப் பயணச்சீட்டை மட்டுமே வழங்க முடியும் என்றும், ஏனைய செலவுகளை அவரே பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும், மங்கள சமரவீர தெரிவித்து விட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தமாத இறுதியில் ஜப்பான் செல்கிறார். அவர் கொழும்பில் இருந்து சிங்கப்பூர் சென்று, அங்கிருந்தே இணைப்பு விமானம் மூலம் நகோயா செல்கிறார். சிங்கப்பூரின் சாங்கி விமான நிலையத்தில் அவர் இணைப்பு விமானத்துக்காக ஐந்து மணிநேரம்காத்திருக்க வேண்டும். ஆனால் அவர் சிங்கப்பூரில் எந்த விடுதி வசதியையும் கோரவில்லை. சாங்கி விமான நிலையத்தில் முக்கிய பிரமுகர்கள் பகுதியில், ஐந்து மணிநேரம் காத்திருக்க அவர் முடிவு செய்துள்ளார்" என்றும் மங்கள சமரவீர அவருக்கு கூறிமுடித்தார்.

மகிந்த ராஜபக்ஷவுடன் நால்வர் கொண்ட குழுவும் உகண்டா சென்றது. காமினி லொக்குகே, லொகான் ரத்வத்த, உதித் லொக்கு பண்டார, தனசிறி அமரதுங்க ஆகியோரே அவர்கள்.

மகிந்த ராஜபக்ஷவின் எல்லா இராணுவப் பாதுகாப்பும் விலக்கப்பட்டு விட்டதாக செய்திகள் கூறிய போதிலும், இரண்டு அதிகாரிகளும், இரண்டு படையினரும் அவருடன்சென்றிருந்தனர். கேணல் மகேந்திர சம்பத், மேஜர் நெவில் வன்னியாராச்சி, சமன் உதய அமரசிங்க, ஹர்ச விக்கிரமஆராச்சி ஆகியோரே அவர்கள்.

பண்டாரநாயக்க அனைத்துலக விமான நிலையத்தில் முக்கிய பிரமுகர்கள் பகுதி வழியாக நுழைவதற்கான முன் அனுமதி பெறுவதற்கு, சமர்ப்பிக்கப்பட்ட வாகனங்கள் கூட, இராணுவப்பதிவெண்களையே கொண்டிருந்தன.

அவர்கள் கொழும்பில் இருந்து டுபாய் சென்று, அங்கிருந்து என்டபே சென்றனர். அவர்கள் என்டபேயில் இருந்து டுபாய் வழியாக நாடு திரும்புகின்றனர்.

அரசாங்கத் தலைவர்களுக்கு கம்போலா நிகழ்வுக்கு அழைக்கப்படாதது ஏன் என்று வெளிவிவகார அமைச்சு உயர்மட்டத்தில் கேள்வி எழுப்பப்படுகிறது.

இந்த நிகழ்வுக்கான அழைப்பை மகிந்த ராஜபக்ஷவுக்கு உகண்டாவின் வெளிவிவகார மற்றும் அனைத்துலக விவகார இணை அமைச்சர் ஓர்யெம் ஹென்றி ஒகே லோவே அனுப்பியிருந்தார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாகப் பணியாற்ற தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி முசவேனியின் பதவியேற்பு விழா மே 12 ஆம் திகதி நடக்கவுள்ளதாகவும் அதில் பங்கேற்குமாறு அழைப்பதாகவும் அவர் அறிவித்திருந்தார்.

இந்த நிகழ்வுக்கு தற்போதைய அரசாங்கத்தில் இருந்து எவரும் அழைக்கப்படவில்லை. மகிந்த ராஜபக்ஷ ஒரு அரசியல் கட்சியின் தலைவராகக் கூட இப்போது பதவி வகிக்கவில்லை. ஆனாலும் இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்காக அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

இதனால் வெளிவிவகார அமைச்சின்உயர்மட்ட கொள்கை வகுப்பாளர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்ற கேள்வி எழுந்திருக்கிறது. முன்னைய அரசாங்கத்தின் பரப்புரையாளர்களாகப்பணியாற்றிய தூதுவர்கள் சிலர் இன்னமும் பல நாடுகளின் தலைநகரங்களில், கோலோச்சுகின்றனர்.

மகிந்தவுக்கு விமானப் பயணச்சீட்டு பெற்றுக் கொடுத்தமை, தற்போதைய அரசாங்கத்தின் முன்னுதாரணம் என்பதில் சந்தேகமில்லை. ஆளுநம்கட்சியின் பிரமுகர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாத போதும், அரச செலவில் முன்னாள் ஜனாதி பதியை அனுப்பி வைத்திருக்கிறது.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னரும், நாடாளுமன்றத் தேர்தல்களின் போதும், மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் வெளிநாடுகளில் சொத்துக்களைப் பதுக்கி வைத்திருப்பதாக அரசாங்கம் குற்றம் சாட்டியிருந்தது. மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் விசாரிக்கப்பட்டு, சொத்துக்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படும் என்றும் அரசாங்கம் கூறியது.

இதுதொடர்பாக இந்த வாரம் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உதவி கோரியிருந்தார்.


கடந்த ஆண்டு இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியும் இதற்கு உதவுவதாகத் தெரிவித்திருந்தார்.

அரசாங்கம் சொத்துக்களை மீட்பதற்கான செயலணிக் குழுவொன்றை அமைத்த போதும், கடந்த ஒரு ஆண்டில், எந்த விளைவுகளும் ஏற்படவில்லை.

மகிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரையில் விமானக் கட்டணமான 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா என்பது சிறிய தொகை. விமானக் கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலையில் தான் மகிந்த ராஜபக்ஷ இருக்கிறார் என்றால், அவருடன் பயணம் செய்த பாதுகாப்புப் பிரிவினர் உள்ளிட்ட ஏழு பேருக்கான செலவீனங்களையும் யார் பொறுப்பேற்றது என்ற சுவாரஸ்யமான கேள்வி எழுகிறது.

மகிந்தவுக்கான இராணுவப் பாதுகாப்பு விலக்கப்பட்டதாக அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்த போதிலும், இராணுவ பாதுகாப்பு அணியொன்று, கேணல் தர அதிகாரி தலைமையில் மகி ந்த ராஜபக்ஷவுடன் பயணம் மேற்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், இந்த விவகாரம் குறித்து அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிரச்சினை எழுப்ப அமைச்சர்கள் பலரும் இப்போதே தயாராகிவிட்டனர்.



**வழிமூலம்- சண்டே ரைம்ஸ்**
**மொழியாக்கம் - கார்வண்ணன்**

# மீட்புப் பணியில் விமானப்படையினர்

களனி ஆற்றின் வெள்ளம் காரணமாக வீடுகளில் சிக்கிக் கொண்டுள்ள பொது மக்களை மீட்கும் பணிகளில் நேற்றும் விமானப்படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

மல்வானை, களனி , கொலன்னாவை, வெல்லம்பிட்டி பிரதேசங்களில் இந்த மீட்புப் பணிகள் நேற்று முழுவதும் நடைபெற்றது. இதற்காக விமானப்படையினரின் இரண்டு ஹெலிகொப்டர்களில் மீட்புக்குழுவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனா.

களனி ஆற்றில் பெருக்கெடுத்த வெள்ளம் காரணமாக சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மேலும் அதிகரித்த நீர் மட்டம் காரணமாக தங்கள் வீடுகளுக்குள் சிக்கிக் கொணடு வெளியேற முடியாது தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இதனைக்கருத்திற்கொணடு கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க அப்பிரதேசங்களில் மீட்புப் பணிகளில் ஈடுபட விமானப் படையினர் தீர்மானித்துள்ளனர்.


மல்வானை தொடக்கம் களனி, கொலன்னாவை, வெல்லம்பிட்டி பிரதேசங்களில் தங்கள் வீடுகளுக்குள் சிக்கிக் கொண்டுள்ளவர்கள் வீட்டுக் கூரைகளின் மீதேறி கைகளை அசைத்துக் காட்டுவதன் மூலம் அல்லது கட்டில் விரிப்புகளை அசைத்துக் காட்டுவதன் மூலம் அவர்களை இலகுவாக இனம் கணடு கொள்ள முடியுமென்று மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.


வெள்ளத்தில் சிக்கி வெளியேற முடியாது தவிக்கும் தமது உறவினர், நண்பர்களுக்கு உடனடியாக இத்தகவல்களை தெரியப்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பனர் சதுர சேனாரத்ன வேணடுகோள் விடுத்துள்ளார்.(இ-5)




# இயற்கையின் சீற்றத்தால் உருவான அவலம்
















சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு நகரம் மற்றும் மண் சரிவு ஏற்பட்டுள்ள அரநாயக்க பிரதேசத்தின் தற்போதைய நிலையைக் காட்டும் புகைப்படங்களே இவை.....





# அ.தி.மு.க அமோக வெற்றி

# தமிழகத்தில் மீண்டும் ஜெயலலிதா ஆட்சி

1984 ஆம் ஆண்டுக்கு பிறகு தொடர்ச்சியாக 2 ஆவது முறையாக அ.தி.மு.க. அரியணை ஏறுகிறது. தமிழகத்தில் இப்படி ஒரு கட்சி 1984 இற்கு பிறகு தொடர்ச்சியாக அரியணை ஏறுவது இது தான் முதல்முறை. 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் எம்ஜிஆர் தலைமையிலான, அதிமுக 144 தொகுதிகளிலும், கருணாநிதி தலைமையிலான திமுக 48 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

தி.மு.கவில் இருந்து எம்.ஜி.ஆர். பிரிந்து சென்று அ.தி.மு.கவை தொடங்கிய இந்த, முதல் தேர்தலிலேயே அக்கட்சி வெற்றிவாகை சூடியது. இரு கட்சிகளுக்கும் முறையே, 33.52 மற்றும் 24.89 சதவீத வாக்குகள் கிடைத்தன.

எம்ஜிஆர் அருப்புக்கோட்டை தொகுதியிலும், கருணாநிதி அண்ணாநகர் தொகுதியிலும் வெற்றி பெற்றனர். 1980 ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலின்போது, எம்.ஜி.ஆர் தலைமையிலான அதிமுக 162 தொகுதிகளிலும், கருணாநிதி தலைமையிலான திமுக 69 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

அதிமுகவுக்கு கிடைத்த வாக்குகள் 48.92 சதவீதம், அதிமுகவுக்கு கிடைத்த வாக்குகள் 44.43 சதவீதம். மதுரை மேற்கு தொகுதியில் எம்ஜி ஆரும், அண்ணா நகர் தொகுதியில் கருணாநிதியும் வெற்றி பெற்றனர்.

1984 ஆம் ஆண்டு சட்ட சபை தேர்தலில் எம்.ஜி.ஆர் தலைமையில் அதிமுகவும், கருணாநிதி தலைமையில் திமுக்வும் மோதின. இதில் அதிமுக 195 தொகுதிகளை வென்று அசத்தியது. திமுக 34 தொகுதிகளை மட்டுமே வென்றது. கருணாநிதி இந்த தேர்தலில் போட்டியிடவில்லை. எம்.ஜி.ஆர், ஆண்டிப்பட்டியில் அமோக வெற்றி பெற்றார்.

அதிமுகவுக்கு வந்த வாக்கு சதவீதம், 53.87 சதவீதமாகும். திமுகவுக்கு 37 சதவீத வாக்குகள் கிடைத்தன. முந்தைய தேர்தலைவிட வாக்கு சதவீதம் அதிமுகவுக்கு உயரவே செய்தது.

ஆட்சிக்கு எதிரான மன நிலை மக்களிடம் இல்லை என்பதை அது காண்பித்தது. இப்படி ஹட்ரிக் வெற்றியை சுவைத்த அதிமுக, எம்ஜிஆர் மறைவுக்கு பிறகு 1989இல் நடந்த தேர்தலில் பிளவுபட்டு ஜெ அணி, ஜா அணி என பிரிந்து மோதியது.

இதில் திமுக எளிதில் வென்று, கருணாநிதி முதல்வரானார். ஆனால் ஆட்சி கலைப்புக்கு பிறகு, 1991ம் ஆண்டு நடைபெற்ற சட்ட சபை தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அமோக வெற்றி பெற்றது. ஜெயலலிதா முதல்முறையாக முதல்வரான இந்த தேர்தலில் அதிமுக 224 தொகுதிகளை வென்று அசத்தியது.

திமுக வெறும் 7 தொகுதிகளில் மட்டுமே வென்றது. ஜெயலலிதா பர்கூர் தொகுதியிலும், கருணாநிதி துறைமுகம் தொகுதியிலும் வெற்றி பெற்றனர். ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு பிறகு நடைபெற்ற தேர்தல் என்பதால் மக்கள் திமுக மீது இந்த அளவுக்கு வெறுப்பை காட்டினர்.

இதன் பிறகு 1996இல் திமுக 221 தொகுதிகளில் வென்று பழி தீர்த்தது. அதிமுகவுக்கு 8 இடங்கள்தான் கிடைத்தன. பர்கூரில் ஜெயலலிதா தோற்றார். சேப்பாக்கத்தில் கருணாநிதி வென்றார். சொத்துக்குவிப்பு, ஆடம்பர திருமணம் போன்றவை ஜெயலலிதாவுக்கு வரலாறு காணாத அடியை பெற்றுக்கொடுத்தது.

இதன்பிறகு, 2001 சட்ட சபை தேர்தலில் அதிமுக 196 இடங்களிலும், திமுக 37 தொகுதிகளிலும் வென்றன. 2006 சட்டசபை தேர்தலில் திமுக 163 தொகுதிகளிலும், அதிமுக 69 தொகுதிகளிலும் வென்றன. 2011இல் நடந்த தேர்தலில் அதிமுக கூட்டணி 203 தொகுதிகளில் வெற்றி பெற்றன. திமுக கூட்டணி 31 தொகுதிகளில்மட்டும்வென்றது.

இப்போது மீண்டும் அதிமுக ஆட்சியை பிடித்துள் ளது. 1984ஆம் ஆண்டுக்கு பிறகு, தொடர்ச்சியாக 2 ஆவது முறையாக அதிமுக அரியணை ஏறுகிறது. தமிழகத்தில் இப்படி ஒரு கட்சி 1984இற்கு பிறகு தொடர்ச்சியாக அர யணை ஏறுவது இதுதான் முதல் முறை. (இ)



## ஜெயலலிதாவின் சாதனை

தமிழ்நாட்டில் 1977 முதல் 1987ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 10 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்து எம்.ஜி.ஆர். சாதனை படைத்தார். 1977, 1980 மற்றும் 1984ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களில் அதிமுக தொடர்ச்சியாக வெற்றிபெற்றது. இதனைத்தொடர்ந்து தமிழ்நாட்டில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் மாறி மாறி ஆட்சியை பிடித்து வந்தன. எந்த கட்சியும் தொடர்ந்து வெற்றி பெற்று ஆட்சி நடத்தியது கிடையாது. இப்போது 30 ஆண்டுகளுக்கு பின்னர் அதிமுக சாதனையை நிகழ்த்தி உள்ளது.

தமிழ்நாட்டில் 1984இற்கு பின்னர் எந்த ஆட்சியும் தொடர்ந்து நீடித்தது இல்லை என்ற கருத்தை அ.தி.மு.க. உடைத்து நொறுக்கி உள்ளது. புதிய சாதனையை படைத்து உள்ள ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சராக பொறுப்பு ஏற்கவுள்ளார். (இ)

## 23 ஆம் திகதி பதவியேற்பு

சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற முதல்வர் ஜெயலலிதா எதிர்வரும் 23 ஆம் திகதி மீண்டும் முதலமைச்சராக பதவியேற்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடைபெற்று முடிந்த சட்டமன்ற தேர்தலில் அதிமுக மற்றும் தி.மு.க. கட்சிகளிடையே நடைபெற்ற கடுமையான போட்டியை தொடர்ந்து சுமார் 30 தொகுதிகள் வித்தியாசத்தில் அதிமுக வெற்றி பெற்றுள்ளது.

1984 ஆம் ஆண்டுக்கு பிறகு ஆளும் கட்சி மீண்டும் ஆட்சியை பீடித்துள்ளது இதுவே முதல் முறையாகும்.

அ.தி.மு.க. வெற்றி பெற்றுள்ளதை உறுதியானதை தொடர்ந்து அரசு மற்றும் பிற துறைகளை சார்ந்த அதிகாரிகள்அதிமுக அலுவலகத்தில் ஜெயலலிதாவை சந்தித்து வாழ்த்து கூறி வருகின்றனர்.

இந்நிலையில், வெற்றி பெற்றுள்ள ஜெயலலிதா எதிர்வரும் 23 ஆம் திகதி சென்னை நூற்றாண்டு பல்கலைக்கழக வளாகத்தில் முதல்வராக பதவியேற்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

முதல்வர் ஜெயலலிதாவுடன் வெற்றி பெற்ற அமைச்சர்களும பதவி ஏற்பார்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ)

## அ.தி.மு.க. தொண்டர்களின் வெற்றிக் கொண்டாட்டம்







# அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேறும் வெற்றிக் களிப்பில் ஜெயலலிதா அறிவிப்பு



நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு மகத்தான வெற்றியை அளித்து, தன்னை மீண்டும் முதல்வராக தேர்ந்தெடுத்த மக்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்வதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் (நம்மைச்) சேரும் என்ற இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல் வரிகளுக்கேற்ப, 'நடந்து முடிந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மகத்தான வெற்றியை அளித்து, என்னை மீண்டும் தொடர்ந்து முதலமைச்சராக தேர்ந்தெடுத்து, ஒரு சரித்திரச் சாதனையை ஏற்படுத்திய எனதருமை தமிழக மக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வெற்றியை எனக்கு அளித்த பெருமை தமிழக மக்களாகிய உங்களையே சாரும். இந்த வெற்றியை எனக்கு அளித்த தமிழக மக்களின் பால் எனக்கு எழுகின்ற உணர்ச்சிப் பெருக்கு, உள்ளத்தில் எழுகின்ற நன்றி உணர்ச்சி இவைகளை விபரிக்க அகராதியில் வார்த்தைகளே இல்லை.

தி.மு.க-வின் பொய் பிரச்சாரங்களை பொடிப் பொடியாக்கி, உன்னதமான, உத்தமமான, உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்டிய தேர்தல் இந்தத் தேர்தல். குடும்ப ஆட்சிக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைத்த தேர்தல் இந்தத் தேர்தல். குடும்பத்தோடு வாக்கு கேட்டவர்களை குழிதோண்டி புதைத்த தேர்தல் இந்தத் தேர்தல். தமிழக மக்களை நம்பாமல் கருத்துக் கணிப்புகளை நம்பிய கட்சிக்கு எதிர்பார்த்த தோல்வியைக் கொடுத்த தேர்தல் இந்தத் தேர்தல்.

என் மீது முழுமையான நம்பிக்கை வைத்து, எனது அன்பான வேண்டுகோளினை ஏற்று, மகத்தான, அபரிமிதமான, அளப்பரிய வெற்றியை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்துள்ள தமிழக மக்களுக்கு என்றென்றும் நான் நன்றிக் கடன்பட்டவளாக இருப்பேன் என்றும் தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவேன் என்றும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக்க தொடர்ந்து அல்லும், பகலும் அயராது உழைப்பேன் என்றும் நான் உறுதி அளிக்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்குப் பிறகு, 1984ஆம் ஆண்டு க்கு பிறகு, தொடர்ந்து ஆட்சி யில் உளள கட்சியே வெற்றி பெற்ற பெருமையை எனக்கு அளித்த தமிழக மக்களுக்கும், இந்தத் தேர்தலில் மெய் வருத்தம் பாராமல், பசி நோக்காமல், கண் துஞ்சாமல், கருமமே கண்ணாயினார்" என்பதற்கேற்ப, ஓயாமல் கழகத்தின் வெற்றிக்காக உழைத்த இரத்தத்தின் இரத்தமான, என் உயிரினும் மேலான, எனதருமை கழக உடன் பிறப்புகளுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், தோழமை கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

புதுச்சேரி யூனியன் பிரதேசம் மற்றும் கேரள மாநிலத்தில் உள்ள ஏழு சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்ட அனைத்திந்திய அண்ணா திரா விட முன்னேற்றக் கழக வேட் பாளர்களுக்கு வாக்களித்த அனைவருக்கும்எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அவா தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

---

கேரளா, அசாமில் காங்கிரஸ் ஆட்சியை இழந்தது

## நான் மக்களின் தீர்ப்பை பணிவுடன் ஏற்கின்றேன்

### ராகுல்காந்தி கருத்து

5 மாநில சட்டசபைத் தேர்தலில் "மக்களின் தீர்ப்பை பணிவுடன் ஏற்கிறேன்" என்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு, கேரளா, அசாம், மேற்கு வங்காளம் மற்றும் புதுச்சேரி சட்டசபை தேர்தல்களில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி நடைபெற்று வருகிறது. காங்கிரஸ் கட்சிக்கு பெரும் பின்னடைவாக கேரளா மற்றும் அசாமில் ஆட்சியை இழந்து விட்டது. அசாமில் பாரதீய ஜனதாவிடமும், மேற்கு வங்காளத்தில் இடது சாரிகளிடமும் ஆட்சியை காங்கிரஸ் பறிகொடுத்துவிட்டது. அசாமில் உள்ள மொத்தம் 126 தொகுதிகளில் பாரதீய ஜனதா 80 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது.

140 தொகுதிகளை கொண்ட கேரளாவில் இடதுசாரிகள் கூட்டணி 90 தொகுதிகளில் முன்னிலை பெற்று உள்ளது. அசாமில் காங்கிரஸ் கூட்டணி 27 தொகுதிகளிலும், கேரளாவில் காங்கிரஸ் கூட்டணி 47 தொகுதிகளிலும் முன்னிலை பெற்று உள்ளது.

தமிழகத்தில் திமுகவுடன் கூட்டணி அமைத்து 41 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் 10 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது. மேற்கு வங்காளத்தில் இடதுசாரிகளுடன் கூட்டணி வைத்து போட்டியிட்ட காங்கிரஸ் 45 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது. மேற்கு வங்காளத்தில் இடதுசாரிகளுக்கு பெரும் பின்னடைவாக கருதப்பட்டாலும், காங்கிரஸ் அதனை விட அதிகமான தொகுதிகளில் முன்னிலை பெற்று உள்ளது. இடதுசாரிகள்வெறும 28 தொகுதிகளிலே முன்னிலை பெற்றுள்ளனர்.

"மக்களின் தீர்ப்பை பணிவுடன் ஏற்கிறேன்"

இந்நிலையில் தமிழ்நாடு, கேரளா, அசாம், மேறகு வங்காளம் மற்றும் புதுச்சேரி சட்டசபை தேர்தல்களில் மக்கள் வாங்கிய தீர்ப்பை பணிவுடன் ஏற்றுக் கொள்வதாகவும், வெற்றி பெற்ற கட்சிகளுக்கு வாழ்த்து தெரிவிப்பதாகவும் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ)

---

## மாநிலம் முழுவதும் 11 நாட்கள் வெற்றிக்கொண்டாட்டம் நடக்கும்

### மம்தா பானர்ஜி அறிவிப்பு



சட்டசபை தேர்தல் வெற்றி 11 நாட்களுக்கு மாநிலம் முழுவதும் கொண்டாடப்படும் என்று மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தில் 294 சட்டசபை தொகுதிகளுக்கான தேர்தல் 6 கட்டமாக நடத்தப்பட்டது. தேர்தலின்போது பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டது. இதில் ஆளும் திரிணாமூல் காங்கிரஸ் 216 தொகுதிகளிலும், இடதுசாரிகள் 31 தொகுதிகளிலும், காங்கிரஸ் 44 தொகுதிகளிலும், பாஜக 7 தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளன. திரிணாமூல் காங்கிரஸ் மீண்டும் ஆட்சி அமைப்பது உறுதியாகி விட்டது.

இந்நிலையில் இது குறித்து மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி கூறுகையில், எங்களை வெற்றி பெறச் செய்த அனைவருக்கும் நன்றி. எதிர்வரும் 27ஆம் திகதி நான் மீண்டும் முதல்வராக பதவியேற்பேன்.

பல பிரச்சினைகளுக்கு இடையே தேர்தலை அமைதியாக நடத்திக் கொடுத்த தேர்தல் ஆணையத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைதது்ள்ளதால் தான் பொய் பிரசாரங்கள் எடுபடவில்லை. வெற்றிக் கொண் டாட்டம் மாநிலம் முழுவதும் 11 நாட்கள் நடைபெறும் என்றார். (இ)

---

## திருவாரூரில் கலைஞர் கருணாநிதி அபார வெற்றி வரலாறு காணாத வாக்கு வித்தியாசத்தில் சாதனை

தி.மு.க.தலைவர் கலைஞர் கருணாநிதி திருவாரூர் தொகுதியில் அபார வெற்றி பெற்றுள்ளார். தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் பன்னீர் செல்வத்தை அவர் 67,212 வாக்குகள் வித்தியாசத்தில் கருணாநிதி வீழ்த்தினார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் திருவாரூரில் போட்டியிட்டார் திமுக தலைவர் கருணாநிதி. நேற்று நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையின் முடிவில் திருவாரூரில் கருணாநிதி 121196 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

இத்தொகுதியில் அவர் இரண்டாவது முறை போட்டியிட்டு வெற்றி கண்டுள்ளார் அதிலும் இம்முறை அதிமுக வேட்பாளர் பன்னீர் செல்வத்தை அதிக வாக்கு வித்தியாசத்தில் வீழ்த்தி புதிய சாதனை படைத்துள்ளார்.

இதுவரை அவர் பெற்ற மிகப் பெரிய வாக்கு வித்தியாசம் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர அகில இந்திய அளவில் சட்டசபைக்கு 13வது முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற பெருமையும் கருணாநிதிக்கு கிடைத்துள்ளது.



தொடர்ந்து 13 முறை சட்டசபைத் தேர்தலில் அவர் வெற்றி பெற்றுள்ளார். இதுவரை களமிறங்கிய எந்தத் தேர்தலிலும கருணாநிதி தோல்வியைத் தழுவவில்லை. கடந்த முறை திரு வாரூரில் அவர் அவர் பெற்ற வாக்குகளை விட இம்முறை கூடுதலாக 18,117 வாக்குகள் பெற்றுள்ளார். கருணாநிதியின் வெற்றியை திருவாரூரில் உள்ள திமுக தொண்டர்கள் பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் கொடுத்தும் கொண்டாடி வருகின்றனர். (இ)

---

## கடும் பின்னடைவை சந்தித்த விஜயகாந்த்; வெறிச்சோடியது தே.மு.தி.க. அலுவலகம்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முதல் சுற்றுவாக்கு எண்ணிக்கை நிலவரப்படி தேமுதிக - மக்கள் நலக் கூட்டணி-தமாகா அணி எந்த ஒரு தொகுதியிலும் முன்னணி பெறவில்லை.

தமிழகத்தில் வாக்குப் பதிவு நடந்து முடிந்த 232 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தொடங்கியது.



முதல் சுற்று நிலவரப்படி தே.மு.தி.க. 2.3 வீத வாக்குகள் பெற்றிருப்பதாக தமிழக தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கிறது.

மேலும், வாக்குப்பதிவு தொடங்கியதில் இருந்தே தே.மு.தி.க. - மக்கள் நலக் கூட்டணி- தமாகா அணி பின்தங்கியே இருந்ததால் தேமுதிகவின் தேர்தல் அலுவலகம் வெறிச்சோடி காணப்படுகிறது. (இ)

---

## விரக்தியில் கருணாநிதி

தமிழக சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் வெளியானதை தொடர்ந்து தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி கடும் விரக்தியில், முக்கிய நிர்வாகிகளை அழைத்து கடும் கோபத்துடன் பேசியதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகம் முழுவதும் 68 வாக்கு மையங்களில், 9,621 பேர் வாக்கு எண்ணும் பணியில் நேற்று ஈடுபட்டனர். நேற்று காலை 8 மணி முதல் வாக்குகள் எண்ணும் பணி நடைபெற்றது.

இந்த நிலையில், தமிழகத்தில் காலை முதல் வாக்குப்பதிவு முடிவுகள் வெளியானது. இதனால், திமுக தலைவர் கருணாநிதி கடும் அதிர்ச்சியடைந்தார்.

தி.மு.க.நிர்வாகிகளிடம் "தமிழகத்தில் என்னய்யா நடக்குது? நான், அப்பவே சொன்னேன், பலமான கூட்டணி வேணும்னு சொன்னேன், யார் கேட்டீங்க...." என்று கடும் கோபத்தை காட்டினாராம்.

மேலும், தோல்வி விரக்தியில் கருணாநிதி தனது கோபத்தை காட்டினாராம். உடன் இருந்தவர்கள் அவரது கருத்தை ஆதரிக்கும் வகையில், ஆமாம். தலைவரே... என அவரது கோபத்தை தணிக்கும் வகையில் ஆறுதல் சொன்னார்களாம். (இ)



# சிறுவர் அரங்கம்

1439

## இரண்டு புலிக்கு எங்கே போவேன்?

(நேற்றைய தொடர்ச்சி...)

அவள் உங்களை ஏமாற்றி இருக்கி றாள். எங்காவது மனிதக் குழந்தைகள் புலியைத் தின்னுமா? வாருங்கள். நாம் அங்கே செல்வோம். அவளையும் குழந்தைகளையும் கொன்று தின்போம், என்றது அது.

அந்தக் குழந்தைகளின் கத்தலை நீ கேட்டிருந்தால் இப்படிப் பேச மாட்டாய். அந்த அரக்கியின் குரல் இன்னும் என் காதில் கேட்கிறது. நான் அங்கு வர மாட்டேன, என்று உறுதியுடன் சொன்னது புலி.

அவள் சாதாரண பெண்தான். உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். அதற்காக உங்கள் வாலையும் என் வாலையும் சேர்த்து முடிச்சுப் போடுவோம். பிறகு இருவரும் அங்கே சென்று பார்ப் போம். உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது. நம் இருவர் பசியும் தீர்ந்து விடும், என்றது நரி.

தயக்கத்துடன் ஒப்புக் கொண்டது புலி.

இருவர் வாலும் சேர்த்து இறுகக் கட்டப்பட்டன. நரி முன்னால் நடந்தது. புலி தயங்கித் தயங்கிப் பின்னால் வந்தது.

மரத்தில் இருந்த அவள் நரியும் புலி யும் வருவதைப் பார்த்தாள். இரண்டின் வாலும ஒன்றாகக் கட்டப்பட்டு இருந்தது. அவளின் கண்களுக்குத் தெரிந்தது. என்ன நடந்திருக்கும் என்பதை உணர்ந்தாள் அவள்.



கோபமான குரலில், நரியே! நான் உன்னிடம் என்ன சொன்னேன்? என் குழந்தைகள் பசியால அழுகின்றன. ஆளுக்கொரு புலி வேண்டும் என்றேன. இரண்டு புலி களை இழுத்து வருவதாகச் சொல்லி விட்டுச் சென்றாய். இப்பொழுது ஒரே ஒரு புலியுடன் வருகிறாய் எங்களை ஏமாற்றவா நினைக்கிறாய்? புலியுடன் உனனையும் கொன்று தின்கிறேன், என்று கத்தினாள்.

இதை கேட்ட புலி நடுங்கியது, இந்த நரிக்குத்தான் எவ்வளவு தந்திரம்? நம்மை ஏமாற்றித் தன் வாலோடு கட்டி இழுத்து வந்திருக்கிறதே. நாம் எப்படிப் பிழைப்பது? ஓட்டம் பிடிப்பது தான் ஒரே வழி, என்று நினைத்தது அது. அவ்வளவுதான். வாலில கட்டப்பட்டு இருந்த நரியை இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கியது.

நரியோ, புலியாரே! அவள் நம்மை ஏமாற்றுவதற்காக இப்படிப் பேசுகிறாள். ஓடாதீர்கள், என்று கத்தியது.

உன் சூழ்ச்சி எனக்குப் புரிந்துவிட்டது. என்னைக் கொல்லத் திட்டம் போட்டாய். இனி உன் பேச்சை கேட்டு ஏமாற மாட்டேன், என்று வேகமாக ஓடத் தொடங்கியது புலி.

வாலில் கட்டப்பட்டிருந்த நரி பாறை, மரம், முள்செடி போன்றவற்றில் மோதியது. படுகாயம் அடைந்தது அது. புலியோ எதைப் பற்றியும் சிந்திக்காமல் நரியை இழுத்துக் கொண்டு ஓடியது. வழியில் நரியின் வால் அறுந்தது. மயக்கம் அடைந்த நரி அங்கேயே விழுந்தது. புலி எங்கோ ஓடி மறைந்தது.

பிறகு அந்தப் பெண் தன் குழந்தைகளுடன் பாதுகாப்பாகக் கணவனின் ஊரை அடைந்தாள். (முற்றும்)

## 05.2016 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1526 - சிரியாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 300,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1498 - போர்த்துக்கீச மாலுமி வாஸ்கொட காமா இந்தியாவின் கோழிக்கோடு நகரை அடைந்தார்.
- 1570 - உலகின் முதலாவது நவீன நிலவரையை ஆபிரகாம் ஓர்ட்டேலியஸ் வரைந்தார்.
- 1605 - ரோமைச் சேர்ந்த கத்தோலிக்க குருத்துவ போதக சுவாமிகள் கோவா வந்து சேர்ந்தார்.
- 1631 - முப்பதாண்டுப் போர்: ஜெர்மனியின் மாக்டெபூர்க் நகரை புனித ரோமப் பேரரசு கைப்பற்றி நகர மக்களின் பெரும்பான்மையோரைப் படுகொலை செய்தனர்.
- 1813 - நெப்போலியன் பொனபார்ட் பிரெஞ்சுப் படைகளுடன் ஜேர்மனியின் சாக்சனி நகரில் நுழைந்து ரஷ்யா, மற்றும் புரூசியாப் படைகளுடன் போரில் ஈடுபட்டு வெற்றி பெற்றான்.
- 1869 - யாழ்ப்பாணத்தில் தொலைத்தொடர்பு இணைப்பு வேலை நிறைவடைந்தது.
- 1873 - லேவி ஸ்ட்ராவுஸ், ஜேக்கப் டாவிஸ் ஆகியோர் இணைந்து செப்புத் தட்டாணியுடனான நீல ஜீன்சுக்கான காப்புரிமம் பெற்றனர்.
- 1882 - ஜெர்மனி, அவுஸ்திரேலியா-ஹங்கேரி, மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் முத்தரப்புக் கூட்டணியை ஏற்படுத்தின.
- 1891 - தொமஸ் அல்வா எடிசன் தனது முதலாவது உடல் அசைவு ஒளிப்படக்கருவியைக் காட்சிப்படுத்தினார்.
- 1902 - ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து கியூபா விடுதலை பெற்றது. தொமாஸ் எஸ்ட் ராடா பால்மா முதலாவது அரசுத் தலைவரானார்.
- 1940 - முதல் தொகுதி சிறைக்கைதிகள் அவுஷ்விட்ஸ் வதை முகாமை வந்தடைந்தனர்.
- 1949 - குவோமிங்தான் அரசு தாய்வானில் இராணுவ ஆட்சியை அறிமுகப்படுத்தியது.
- 1965 - எகிப்தில் கெய்ரோ நகரில் பாகிஸ்தான் விமானம் தரையிறங்கும் போது ஏற்பட்ட விபத்தில் 119 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980 - கியூபெக் மாநிலத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் கனடாவில் இருந்து விடுதலை பெறுவதற்கு எதிராக 60 விழுக்காட்டினர் வாக்களித்தனர்.
- 1983 - எயிட்ஸ் நோயை உண்டாக்கும் கிருமிகளைக் கண்டுபிடித்த செய்திகள் முதற் தடவையாக வெளியிடப்பட்டன.
- 1995 - கியூபெக் மாநிலத்தில் இடம்பெற்ற இரண்டாவது வாக்கெடுப்பில் கனடாவில் இருந்து விடுதலை பெறுவதற்கு எதிராக பெரும்பான்மையானோர் வாக்களித்தனர்.
- 1999 - புளூடூத் வெளியிடப்பட்டது.
- 2002 - கிழக்குத் தீமோரின் விடுதலையை போர்த்துக்கல் அங்கீகரித்தது. 23 ஆண்டு கால இந்தோனீசிய ஆட்சி, மற்றும் மூன்றாணடு கால ஐநாவின் தற்காலிக ஆட்சி முடிவுககு வந்து கிழக்குத் திமோர் விடுதலை பெற்றது.

**பிறப்புக்கள**

- 1799 - பல்சாக், பிரெஞ்சு எழுத்தாளர். (இ. 1850)
- 1845 - அயோத்தி தாசர், தமிழறிஞர். (இ. 1914)
- 1860 - எடுவர்டு பூக்னர், ஜெர்மனிய வேதியியல் அறிஞர். (இ. 1917)
- 1894 - சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், காஞ்சி காமகோடி பீட குரு. (இ. 1994)
- 1939 - பாலுமகேந்திரா, தமிழ்த் திரைப்பட இயக்குநர். (இ. 2014)
- 1954 - ராசன்பி.தேவ், மலையாள நடிகர். (இ 2009)

**இறப்புகள**

- 2005 - செம்பியன் செல்வன், ஈழத்து எழுத்தாளர். (பி. 1943)
- 1506 - கிறிஸ்தோபர் கொலம்பஸ், இததாலியக்கடல் பயணி. (பி. 1451)
- 1947 - பிலிப் லெனார்ட், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1862)
- 1957 - த. பிரகாசம், இந்திய சுதந்தர போராட்ட வீரர், சென்னை மாகாணத்தின் முன்னாள முதல்வர். (இ. 1872)
- 2008 - பால்ராஜ், விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி. (பி. 1965)

**சிறப்பு நாள்**

- கமரூன் - தேசிய நாள்.
- கிழக்குத் தீமோர் - விடுதலை நாள்

### கிறிஸ்தோபர் கொலம்பஸ இததாலியக்கடல் பயணி



கிறித்தோபர் கொலம்பஸ் இத்தாலிய நாடுகாண் பயணியும் வணிகரும் காலனித்துவவாதியும் ஆவார். இவர் 1492-இல் அட்லாண்டிக் கடலைக் கடந்து அமெரிக்காவை வந்தடைந்த முதல் ஐரோப்பியர் ஆவார். அவர் இத்தாலியின் செனோவா என்ற குடியரசைச் சேர்ந்தவர் என்று கருதப்படுகிறது.எசுப்பானியப் பேரரசின் கத்தோலிக்க பேரரசர்களின் ஆட்சியல் கொலம்பசு நான்கு கடற்பயணங்களை அத்திலாந்திக்கு பெருங்கடலைக் கடந்து மேற்கொண்டுள்ளார். இந்தக் கடற்பயணங்களும் லா எசுப்பானியோலா தீவில் இவர் நிரந்தரக் குடியேற்றம் அமைக்க மேற் கொண்ட முயற்சிகளும் புதிய உலகம் என அழைக்கப்பட்ட அமெரிக் காக்களில் எசுப்பானிய குடியேற்றத்தைத் துவக்கின. புதிய வணிக வழிகளைக் கண்டறிந்து குடியேற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற மேற்கத்திய பேரரசுவாத போக்கு மற்றும் ஐரோப்பிய இராச்சியங்களிடையேயான பொருளியல்நிலை போட்டியில் கிழக்கத்திய இந்தியாவை எட்ட கொலம்பசு மேற்கில் பயணித்து உலகைச் சுற்றி இந்தியாவை அடைய முன்மொழிந்தார். இதற்கு எசுப்பானிய அரசரின் ஆதரவைப் பெற்ற கொலம்பஸ் 1492இல் மேற்கில் பயணித்து புதிய உலகத்தை கண்டறிந்தார். பகாமாசு தீவுக்கூட்டங்களில் தாம் பின்னர் சான் சால்வதோர் எனப் பெயரிட்ட தீவில் வந்திறங்கினார். மேலும் மேற்கொண்ட மூன்று கடற்பயணங்களில் கொலம்பஸ் பெரிய மற்றும் சிறிய அண்டிலிசு தீவுகளையும் வெனிசுவேலா, நடு அமெரிக்கா வின் கரிபியக் கடலோரப் பகுதிகளையும் கண்டறிந்து அவற்றை எசுப்பா னியப் பேரரசுக்கு உரியதாக உரிமை கோரினார். கொலம்பஸ் அமெரிக காவை அடைந்த முதல் ஐரோப்பியரல்லர் 11ஆவது நூற்றாண்டி லேயே லீப் எரிக்சன் தலைமையேற்ற நோர்சு குழு வட அமெரிக்காவில் இறங்கியுள்ளது. இருப்பினும் இவரது கடற்பயணங்களே அமெரிக்காக்களுடனான ஐரோப்பாவின் முதல் நிரந்தர தொடர்பை ஏற்படுத்தியத்து இவற்றை அடுத்தே பல நூற்றாண்டுகளுக்கு ஐரோப்பியர்களின் நாடுகாணுதல், கைப்பற்றுதல், குடியேற்றவாதம் தொடர்ந்தன. எனவே இவரது கண்டறிதல் தற்கால மேற்கத்திய உலகின் வரலாற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நிகழ்வாக அமைந்தது. இதுவரை ஐரோப்பியர்கள் கண்டறியாத புதிய கண்டத்தை வந்தடைந்துள்ளோம் என்பதை ஏற்றுக்கொள்ளாத கொலம்பஸ் இங்கு வாழ்ந்திருந்த மக்களை இன்டியோசு என்றே அழைத் தார். அமெரிக்கா வில் குடியேற்றப் பகுதிகளுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமித்தது தொடர்பான எசுப்பானிய பேரரசருடனான பிணக்கு காரணமாக 1500 இல் லா எசுப்பானியோலாவின் ஆளுநர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். பின்னால் நீண்ட வழக்காடலுக்குப் பின்னர் கொலம்பசும் அவரது வாரிசுகளும் கோரிய உரிமைகள் அவர் களுக்கு வழங்கப்பட்டன.

## இந்திய மீனவர்களால் வருடம்தோறும்

# 840 கோடி அபகரிப்பு!

## இலங்கை அரசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கையின் மீன்வளத்தை கொள்ளையடிப்பதன் ஊடாக வருடாந்தம் 840 கோடி ரூபா வருமானத்தை இந்திய மீனவர்கள் அபகரித்துச் செல்வதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன என இலங்கை அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.**



வடக்கு பிராந்திய கடலில் தினமும் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவது வழமையாகிவிட்டது.

இலங்கைக் கடற்படையினரால் அத்துமீறும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டாலும். அரசியல் அழுத்தங்களின் காரணமாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டு விடுகின்றார்கள்.

இந்நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக வருடமொன்றுக்கு 840 கோடி ரூபா பெறுமதியான இலங்கையின் மீன்வளம் கொள்ளையடிக்கப்படுவதாக புள்ளி விபரமொன்று தெரிவிக்கின்றது.

இதனைக் கருத்திற் கொண்டு இனிமேல் கைது செய்யப்படும் இந்திய மீனவர்களின் படகுகளை பறிமுதல் செய்யப் போவதாக மீன்பிடி ,நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வருடமொன்றுக்கு சுமார் 40 ஆயிரம் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக வட பிராந்தியத்தில் வாழும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை மீனவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் அமைச்சர் அமரவீர தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் இந்தியப் பிரதமர் மோடி சந்திப்பின் போது இதற்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பது குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## இரவு நேரக் கடைகள் நள்ளிரவு ஒரு மணிவரை

(கொழும்பு)

மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரவு நேரக் கடைகளுக்கு மஹரகம பொலிஸார் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளனர்.

இந்தப் பிரதேசங்களில் நடத்தப்படும் இரவு நேரக் கடைகள் யாவும் நள்ளிரவு ஒரு மணி முதல் மூடப்பட வேண்டும் என மஹரகம பொலிஸார் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு நடவடிக்கையொன்றின் நிமித்தம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இரவு நேரக் கடைகளில் கூடும் பெரும்பாலான நபர்கள்தான் சமூக விரோத குற்றச் செயல்களில் தொடர்புபடுவதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனாலேயே, இந்த தீர்மானம் எடுக்கப்பட வேண்டி ஏற்பட்டது என அவர் தெரிவித்தார். இருப்பினும், இரவு நேரக் கடை உரிமை யாளர்கள் இந்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இரவு நேரக் கடைகளில் பணியாற்றுவோருக்கு கூடிய சம்பளம் கொடுக்கப்படுகின்றது. இதனை ஊழியர்கள் இழக்க நேரிடுகின்றது. தூரப் பயணங்களில் ஈடுபடும் பயணிகள் இதனால் பாதிக்கப்படப் போகின்றார்கள் எனவும் கடை உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ)

# அரசு போர் வெற்றியை இழிவுபடுத்துகின்றது

### கூறுகிறார் குணவர்த்தன

அரசாங்கம் போர் வெற்றியை இழிவுபடுத்துகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலகின் பயங்கரமான பயங்கரவாத அமைப்பினை தோற்கடித்த நாளைக் கொண்டாடுவதில் தவறில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 310,000 சாதாரண மக்களை படையினர் மீட்டு எடுத்திருந்தனர்.

இந்த நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் அமைப்பும் பாராட்டியிருந்தது. பாராட்டுக்குரிய மனிதாபிமான மீட்புப் பணியாகவே உலக அரங்கில் கருதப்பட்டது.

இந்தப் போரில் ஆயிரக் கணக்கான படையினரும் பொலிஸாரும் உயிர்த் தியாகம் செய்திருந்தனர்.

எதிர்கால சந்ததியினருக்காக நாட்டை பாதுகாக்கவே இவ்வாறு உயிர்த்தியாகம் செய்யப்பட்டது.



தற்போதைய அரசாங்கம் படைவீரர்களை அதிகம் நினைவு கூர்வது சரியில்லை என கூறுகின்றது.

கூட்டு எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாம் இதனை எதிர்க்கின்றோம்.

போர் வெற்றியை இழிவுபடுத்த அரசாங்கம் முயற்சிப்பது வெளிச்சமாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் தரப்புக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே அரசாங்கம் இவ்வாறு படைவீரர்களுக்கு கௌரவம் செலுத்துவதனை தவிர்க்கின்றது.

விளக்குகளை ஏற்றி படைவீரர்களை நினைவுகூருமாறு நாம் கோருகின்றோம் என தினேஸ் குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### எதை உடனே சொல்ல வேண்டும் எதை உடனே சொல்லக் கூடாது?

எந்த ஒரு விடயத்திலும் நேரமே அதில் பிரதானம் என்றால் உடனே சொல்லிவிட வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் காலம் கடந்து சொல்வது என்பது சொல்லாதிருப்பதை விட மோசமான செயல். ஒருவர் தன் சுபாவத்தையொட்டி ஒன்றைப் பற்றித் தவறாகப் பேசுகிறார் அல்லது தவறாகச் செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம்.

இத்தகையவர்கள் அத்தகைய செயலைச் செய்த மறு நிமிடமே நாம் எதுவும் சொல்லக் கூடாது. ஆற அமர இருக்கும் போதும் நாம் சொல்வதை அவர்கள் கேட்கும் மனநிலையில் இருக்கும் போது தான் சொல்ல வேண்டும். உடனே சொன்னால் இவர்கள் கோபமும் எரிச்சலும் அடைவார்களே தவிர, காதில் வாங்கிக் கொள்ளவோ மண்டையில் ஏற்றிக் கொள்ளவோ மாட்டார்கள்.

இறப்புச் செய்திகளையும் லாட்டரியில் பெரும் பரிசு விழுந்த செய்திகளையும் உடனே சொல்லக் கூடாது. இன்னாருக்கு உடம்பு சரியில்லையாம். கொஞ்சம் சீரியஸ் தானாம். பிழைப்பதே கஷ்டம் தானாம் இறந்து விட்டார் என்று சொல்கிறார்கள். என்றெல்லாம் படிப்படியாக அவர்களைச் சோக சூழ்நிலைக்கு உருவாக்கிப் பின்னரே சொல்ல வேண்டும். மகிழ்ச்சியான செய்திகளையும் இப்படியே படிப்படியாகச் சொல்ல வேண்டும். உங்களுக்கு லாட்டரியில் பத்து லட்சம் ரூபாய் விழுந்தால் என்ன செய்வீர்கள் என்பதாகக் கேட்டு அவர்கள் கற்பனையில் மிதக்க ஆரம்பித்தவுடன் உண்மையை உடைக்க வேண்டும். ஐந்து இலட்ச ரூபாய் பரிசு விழுந்ததைச் சொன்னதும் அந்த இடத்திலே உயிரைவிட்ட ஒரு சம்பவத்தை அண்மையில் பத்திரிகையில் படித்திருப்பீர்களே...

நாம் ஒரு நல்ல முயற்சியிலோ வித்தியாசமான முயற்சியிலோ ஈடுபட்டிருக்கிறோம் என வைத்துக் கொள்வோம். அதைப் பற்றி உடனே சொல்வதா? எல்லாம் முடிந்தவுடன் சொல்வதா? என்ற கேள்வி அடுத்தது. இப்படிப்பட்ட விடயங்களில் நாம் யாரிடம் சொல்ல விரும்புகிறோமோ அவர் எப்படிப்பட்டவர் என்பதைப் பொறுத்துத் தான் இதை முடிவெடுக்க வேண்டும். ஏன் முன்பே சொல்லவில்லை என்று சண்டைக்கு வருவாரா? பொறாமைப்பட்டு சாவாரா? இடையில் நுழைந்து காரியத்தைக் கெடுத்து விடுவாரா? ஆகிய கேள்விகளை நாமே எழுப்பிக் கொண்டு விடைகாண வேண்டிய விடயமிது.

ஆனால், நாம் தெரிவிக்கக்கடமைப்பட்டவர்கள் என்று சிலர் இருக்கிறார்கள். பெற்றோர், மேலதிகாரிகள் போன்றவர்கள் இவ்வகையினர். இவர்களிடத்தில் எதையும் உடனே சொல்லிவிடுவது நல்லது. யாராக இருந்தாலும் நல்ல அபிப்பிராயங்களைப் பாராட்டு மொழிகளை உடனே சொல்லலாம். மற்றவற்றைத் தாமதித்துச் சொல்வது நமக்கு நல்லது.

ஒருவரை நீண்ட நாட்களுக்குப் பின் சந்திக்கும் போது நல்ல செய்திகளை உடனேயும் மற்றவற்றை தாமதித்துச் சொல்வது நல்லது.

மற்றவர்கள் நம்மிடம் ஒப்படைக்கும் பணி தொடர்பான செய்திகளை உடனே சொல்ல வேண்டும். அசட்டைத் தனமும் தாமதிக்கும் குணமும் நம்மிடமிருந்தால் அதனால் நாம் பாதிப்படைவதில் நியாயம் இருக்கிறதே தவிர , மற்றவர்களையும் அப்படி ஆளாக்குவதில் எவ்வித நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஞாபக மறதி உள்ளவர்கள் உடனே சொல்ல வேண்டியவற்றை உடனேயும் தாமதித்துச் சொல்ல வேண்டியவற்றைக் குறித்துக் கொண்டு நேரம் வரும் போதும் சொல்ல வேண்டும்.

அதெல்லாம் முடியாது. அப்புறம் நான் மறந்து விடுவேன் என்று தாமதித்துச் சொல்லாமல் உடனே சொல்லிவிடுவார்களேயானால் வீண் வம்புதான். பழியும் அவச் சொல்லும் நமக்கு வந்து விடாத படி நம்மைக் காத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படக் கூடிய எந்த விடயங்களையும் உடனே சொல்லிவிட வேண்டும். மற்றவற்றைச் சந்தர்ப்பம் அறிந்து சொல்லலாம்.

லேனா தமிழ்வாணன்

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 14.05.2016~14.06.2016

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும் நேரம்!



சாதனைகள் நிகழ்த்தி சரித்திரத்தில் இடம்பெற விரும்பும் சிம்ம ராசி நேயர்களே!

துர்முகி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சூரியன் 10 ஆம் இடத்தில் பலம் பெற்றிருக்கின்றார். பஞ்சம அஷ்டமாதிபதியான குரு, உங்கள் ராசியில் வக்ரம் பெற்றிருக்கின்றார். குரு சந்திரயோகத்தோடும், புத சுக்ர யோகத்துடனும் பிறக்கும் இம்மாதம், பெருமைகளைக் குவிக்கும் மாதமாக அமையப் போகின்றது.

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். தேங்கிய காரியங்கள் இனி சிறப்பாக நடைபெறும். யோககாரகன் செவ்வாய சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால், தேக நலன் சீராகும். தெய்வீகப் பயணங்களையும் மேற்கொள்வீர்கள். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருக்கிறதே என்று நீங்கள் கவலைப் பட வேண்டாம். அதன் வலிமை இப்பொழுது வக்ர இயக்கத்தில் இருக்கின்றது. எனவே நீண்ட நாட்களாக நடைபெறாத சில காரியங்கள், இப்பொழுது துரிதமாக நடைபெறும்.

குடும்ப ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவித்தவர்கள் இப்பொழுது விலகுவர். மறைமுக எதிரிகளின் தொல்லை அகலும். மக்கள் செல்வாக்கு உங்களுக்கு அதிகமாக இருப்பதால் காரியங்களை எளிதில் சாதித்துக் கொள்வீர்கள். உங்கள் ராசிக்கு 7 இல் கேதுவும், ஜென்மத்தில் ராகுவும் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. சர்ப்பக் கிரகங்களின் ஆதிக்கம் கூடுதலாக இருக்கும் பொழுது, உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது.

ஊர்மாற்ற சிந்தனைகள் மேலோங்கும். புகழின் உச்சியில் நீங்கள் வாழ்ந்தாலும், மனதில் இனம் புரியாத கவலை குடிகொள்ளும். இதுபோன்ற காலங்களில் நினைத்தது நிறைவேறவும், நிம்மதியான வாழ்க்கை அமையவும் செவ்வாய்க்குரிய பரிகாரங்களையும், வழிபாடுகளையும் மேற்கொள்வதோடு சர்ப்ப சாந்தியும் செய்வது நல்லது.

குறிப்பாக வைகாசி விசாகத் திருநாள் வருவதால், அந்தத் திருநாளில் விரதமிருந்து முருகப்பெருமான் சன்னிதியில் ஜோடி தீபம் ஏற்றி வைத்து கவச பாராயணம் செய்து வருவது நல்லது. கவசம் படித்தால் கவலைகள் தீரும். 'சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை, சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை' என்பது பழமொழி. அந்த சுப்பிரமணியர் வழிபாட்டை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் செய்து வந்தால், குறுக்கீடு சக்திகள் விலகும், நெருக்கடிகள் மறையும்.

**ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 3,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் இம்மாதம் 10 ஆம் திகதி தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். ராசிநாதனும், தொழில் ஸ்தானாதிபதியும் ஒன்றாக இணைந்து சஞ்சரிக்கும் பொழுது, புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்ற நண்பர்கள் ஒத்து வருவர். பழைய தொழிலில் வர வேண்டிய பாக்கிகள் வசூலாகும். சகோதர வர்க்கத்தினரால் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும்.




**ரிஷப புதனின் சஞ்சாரம்!**

ஜூன் 3 ஆம் திகதி ரிஷப ராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 2,11 இற்கு அதிபதியானவர் புதன். தனலாபாதிபதியான புதன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, லாபம் பல மடங்காக உயரும். புதிய திட்டங்கள் தீட்டி வெற்றி பெறுவீர்கள். அதிக உற்சாகமும், அளவு கடந்த தன்னம்பிக்கையும் வந்து சேரும். இந்த காலத்தை ஒரு பொற்கால மாகவே கருதலாம்.

**மிதுன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 13 ஆம் திகதி மிதுன ராசிக்கு சுக்ரன் செல்கிறார். அதே நாளில் ரிஷபத்தில் உள்ள புதன் வலிமை இழக்கிறார். எனவே இக்காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. விரயங்கள் கூடும். நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரும். பணப்பொறுப்புகள் சொலவதன் மூலம் சிக்கல்கள் உருவாகலாம்.

இம்மாதம் சிவன் வழிபாடு சிறப்பை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

புதிய பாதை புலப்படும் இனிய மாதம் இது. புகழ் கூடும். பொருளாதார நிலை உயரும். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர். தன்னம்பிக்கை அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் ஆதரவும், ஆதாயமும் உண்டு. பிளளைகள் பெருமைக்குரிய தகவலகளைக கொண்டுவந்து சேர்ப்பார்கள். மதப்பும், மரியாதையும் பெருகும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். உடன் பிறப்புகளிடம் பகையை வளர்த்துக் கொள்ள வேண்டாம். சனிக் கிழமை தோறும் அனுமனை வழிபடுவதால் சநதோஷத்தை தக்க வைத்துக்கொள்ளலாம்.

## உத்தியோக மாற்றங்கள் உறுதியாகும் நேரம்!



அமைதியாக இருந்து கொண்டே சிறப்பாக பணிபுரியும் கன்னி ராசி நேயர்களே!

துர்முகி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் புதன் 8 ஆம் இடத்தில் சுக்ரனோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். 'மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும்' என்பது பழமொழி. எனவே பொருளா தாரத்தைப் பொறுத்த வரை திருப்திகரமாகவே இருக்கும். பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். ஆக்கப்பூர்வமாக செயற்பட்டு அனைத்துக் காரியங்களிலும் வெற்றி காண்பீர்கள். தேக்க நிலை மாறி தெளிவு பிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும்.

உங்களுக்கு வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகள் வந்திருக்கலாம். வழக்குகளையும் சந்தித்திருப்பீர்கள் உறவினர் பகையால் உள்ளம் வாடி இருப்பீர்கள் குழந்தைகளின் முன்னேற்ற த்தில் குறுக்கீடு ஏற்படுகின்றதே என்று கவலைப்பட்டிருப்பீர்கள். அத்தனைக்கும் வடிகாலாக முத்தான பலன்களை வழங்கும் விதத்தில் இம் மாதக் கிரக நிலைகள் உள்ளன.

பன்னிரண்டாம் இடத்தில் குருவும், ராகுவும் இணைந்திருக்கிறார்கள். 4,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் 12 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். தாய்வழிப் பிரச்சினைகள அகலும். பெற்றோர்களின் பிரியம் கூடும். வாகன யோகம் உண்டு. பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். வெளிநாட்டு வாய்ப்புகள் அடுக்கடுக்காக வந்தாலும், அவை எண்ணியபடி அமையவில்லையே என்ற கவலை அகலும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றம் ஏற்படும்.

நண்பர்கள், உங்கள் நட்பிற்கு இலக்கணமாக விளங்குவர். ஆடை, ஆபரண சேரக்கை அதிகரிக்கும். வீடு வாங்க வேணடும், இடம் வாங்க வேண்டும், வியாபார மாற்றங்களைச் செய்ய வேண்டும் என் றெல்லாம் முடிவு செய்திருந்தவர்கள், அவை ஒவ்வொன்றாக நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். புதிய திட்டங்கள் தீட்டிப் பொன்னான எதிர்காலத்தை வரவழைத்துக் கொள்வீர்கள்.

விசாகத் திருநாள் அன்று விரதமிருந்து முருகப்பெருமானை வழிபட்டு வந்தால், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். கூட்டு முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

**ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் மே 20 ஆம் திகதி ரிஷ பத்தில் சஞ்சரிக்கும் பொழுது பணவரவு திருப்திகரமாக இருக்கும். பூர்வீக சொத்துக்களால் லாபம் கிடைக்கும். பாகப பிரிவினை சம்பந்தமாக ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். மருத்துவச் செலவுகள் குறையும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு உரிய விதத்தில் தொழில் தொடங்க முன் வருவர்.




நகைகள் வாங்குவதில் நாட்டம் செல்லும்.

**ரிஷப புதனின் சஞ்சாரம்!**

ஜூன் 3 ஆம் திகதி ரிஷப ராசிக்கு புதன் செல்லப் போகின்றார். இதன் விளைவாக அற்புதமான பலன்கள் அன்றாடம் நடைபெறப்போகின்றது. உற்பத்தி செய்த பொருட்கள் ஓரிடத்தில் குவிந்து கிடக்கின்றதே என்று கவலைப்பட்டவர்கள், இனி அவை விறபனையாகி வியாபாரம் சூடுபிடிப்பது கண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். பணப் புழக்கம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

**மிதுன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூன் 13 ஆம் திகதி மிதுன ராசிக்கு சுக்ரன் செல்கின்றார். அதே நாளில் ரிஷபத்தில் உள்ள புதன் வலிமை இழக்கிறார். எனவே பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். பெண் குழந்தை களின் சுப சடங்குகள் மற்றும் கல்யாண காரியங் கள் நடத்துவதில மும்முரம் காட்டுவீர்கள். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

இம்மாதம் அனுமன் வழிபாடு மகிழ்ச்சியை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும் மாதமாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்று வீர்கள். கணவன் -மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி களில் வெற்றி கிடைக்கும். உடன் பிறப்பு கள் உதவிக்கரம் நீட்டுவர். விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்பு கை கூடும். வீடு மாற்றங்கள் விரும்பும் விதத்தில் அமையும். குருவின் வக்ர நிவர்த்திக்குப் பிறகு உத்தியோக மாற்றங்களும் உறுதியாகலாம். பெற்றோர்கள் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். ஏகாதசி விரதமிருந்து பெருமாளை வழி பட்டு வந்தால் இனிய பலன்கள வந்து சேரும்.

(தொடரும்)

# வரி அதிகரிப்புக்கு நான் எதிரானவன்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

பொதுமக்களுக்கு சுமையை அதிகரிக்கும் முகமாக அரசாங்கமானது வரி அதிகரிப்பு செய்த செயலுக்கு தான் எதிரானவன் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் கொள்ளையிட்ட பொதுமக்களின் பணத்தை இந்த அரசாங்கம் வரி அதிகரிப்பு மூலம் பெற்றுக்கொள்ள நினைப்பதை விடுத்து பொதுமக்களின் பணத்தை சுருட்டியவர்களிடமே அதை வசூலிக்க வேணடும் என்று தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெ பற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேசிய விமான சேவையானது அரசின் கீழ் பராமரிக்கப்பட வேண்டும் என்பதே தனது அபிப்பிராயம் என்றும் தெரிவித்துள்ளதோடு, விமான சேவையானது தனி நபர்கள் அல்லது வேறு ஒரு நிறுவனத்துக்கோ வழங்குவதற்கு தான் அன்றிலிருந்து எதிர்ப்பை வெளியிட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.


இதேவேளை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியின் போதும் விமான சேவையினை விற்பதற்கு தான் எதிர்ப்பு குரல் எழுப்பி வந்ததாகவும் அமைச்சர் ராஜித மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# விளையாட்டு விழா

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் குடும்பமாக பங்கேறகும் விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் கோப்பாய் பரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்விப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டு திணைக்கள பணிப்பாளர் இ.குருபரன், யாழ். போதனா வைத்தியசாலை விளையாட்டுப் பிரிவு மருத்துவர் டாக்டர் ச.அறிவுச் செல்வன், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலாளர், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரன், கோப்பாய் கிறிஸதவக்கல்லூரிஅதிபர் ச.வேல் அழகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ)

# யுத்தத்தில் உயிர் நீத்த உறவுகளுக்கு யாழில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை








(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் உரிமை விடுதலைக்காக யுத்தத்தில் உயிர் நீத்த அனைத்து தமிழ் உறவுகளுக்குமான ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பங்கேற்று அஞ்சலி செலுத்தினார். நேற்றைய தினம் வியாழக்கிழமை நண்பகல் யாழில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமைச் செயலகத்தில் கட்சியின் இளைஞர் அணியினரால் இவ்வஞ்சலி நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந் நிகழ் விலேயே விடுதலைக்காக உயிரிழந்த மக்கள் நினைவாக தீபமேற்றி அஞ்சலி செய்துள்ளார். இவ் அஞ்சலி நிகழ்வில் இளைஞர்கள், யுவதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலிகளை செலுத்தியதோடு, மெழுகுவர்த்திகளை ஏற்றி, மலர் அஞ்சலிகளையும் மேற்கொண்டனர். இதன் போது கருத்து தெரிவித்த அங்கஜன்


இலங்கை தமிழர்கள், வரலாற்றில் பல்வேறுபட்டவர்களின் ஆட்சிகளின் போது பல்வேறுபட்ட கறைகள் வலுவான வடுக்களாக பதியப்படிருக்கின்றன. அந்த வடுக்கள் அனைத்திலும் உலகமெங்கும் பரந்துவாழும் ஈழ தமிழ் மக்களின் மனதில் ஆழமாக என்றும் ஒரே மாதிரியான வலியை தரக்கூடிய உணர்வு நிலையை 2009 ஆம் ஆண்டு மே மாதம் எமக்கு தந்திருக்கின்றது.

விடுதலைக்கான போராட்டத்தில் 2009 ஆம் ஆண்டு எமது ஈழவிடுதலை போராட்டம் கூட்டு முயற்சியில் திட்டமிட்டு அழிக்கப்பட்டது . எமக்காக வாழ்ந்த உறவுகளின் உயிர்கள் பறிக்கப்பட்டது. எமது சொத்துக்கள் அழிக்கப்பட்டன. எனினும் எமது உணர்வுகள் செத்துவிடவில்லை. எமது ஆயுதப் போராடடம் தோற்கடிக்கப்பட்ட போதிலும், அரசியல் ரீதியான போராட்டம் தோற்கடிக்கப்படவில்லை.

தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுத்தர தமிழ் தலைவர்கள் முயற்சிக்க வேண்டும். எமது உள்ளக்கு முறலில் உள்ள உரிமைக்கான போராட்டம் தோற்று விடவில்லை. இன்று உரிமைக்கான போராட்டம் மறு வடிவம் எடுத்துள்ளது. எமது உரிமையினை வென்றெடுக்கும் வரை எமது போராட்டம் தொடரும் என மேலும் கூறினார். இந்நிகழ்வில் கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொணடனர். (இ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 725

அச்சு



சங்கர்


மனைவி: வேலைக்காரி குளிக்கறப்ப எட்டிப் பார்த்தீங்களாமே? நிஜமா?

கணவன்: உன்னோட சோப்பை யூஸ் பண்றாளானு பார்த்தேன்



கெனி


இது வெளிநாடு இல்லை. நம் நாட்டில் எடுக்கப்பட்ட புகைப்படம் தலைகீழா பாருங்க என்ன ஒரு அதிசயம்.



றொகான்

நிம்மதியாக இருக்கும் வயதில் மனைவியைத் தேடுவதும் மனைவி வந்த பின் நிம்மதியைத் தேடுவதுமே ஆண்களின் இயல்பு.

சங்கவி



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

162

## எம்.ஜி.ஆரின் 2 ஆவது சொந்தப்படம் அடிமைப் பெண்

சொந்தக் குரலில் ஜெயலலிதா பாட்டு

இப்படத்தில் ஜெயலலிதா மிகச் சிறப்பாக நடித்ததோடு அம்மா என்றால் அன்பு என்ற வாலியின் பாடலை சொந்தக் குரலில் பாடினார்.

வாலி எழுதிய ஏமாறாதே... ஏமாற்றாதே என்ற பாடலும் ஆலங்குடி சோமு இயற்றிய தாயில்லாமல் நானில்லை என்ற பாடலும் புலமைப்பித்தனின் ஆயிரம் நிலவே வா என்ற பாடலும் ஹிட் ஆகின.

ஆயிரம் நிலவே வா பாடல் மூலம்தான் எஸ்.பி. பாலசுப்ரமணியம் தமிழ்த் திரை உலகுக்கு பின்னணிப் பாடகராக அறிமுகம் ஆனார்.

சண்டைக்காட்சிகள் புதுமையான முறையில் விறுவிறுப்பாக அமைந்தன. சிங்கத்துடன் எம்.ஜி.ஆர். சண்டைபோடும் காட்சி மெய்சிலிர்க்கச் செய்தது.

வெள்ளி விழா

அடிமைப்பெண், மதுரை சிந்தாமணி தியேட்டரில் 176 நாட்கள் ஓடி வெள்ளி விழா கொண்டாடியது.

சென்னையில் மிட்லண்ட் உட்பட 4 தியேட்டர்களில் நூறு நாட்களுக்கு மேல் ஓடியது.

திருச்சி, கோவை, சேலம் உட்பட 9 நகரங்களில் நூறு நாட்கள் ஓடியது. நெல்லையில் சென்ட்ரல் தியேட்டரில் 120 நாட்கள் ஓடியது குறிப்பிடத்தக்கது.

1969 ஆம் ஆண்டின் சிறந்த படத்துக்கான தமிழக அரசின் விருது இப்படத்துக்குக் கிடைத்தது.

நம் நாடு

நாகிரெட்டி-சக்ரபாணி ஆகியோர் விஜயா இன்டர்நேஷனல் சார்பாக தயாரித்த படம் நம் நாடு இதை டைரக்ட் செய்தவர் ஜம்பு. வசனம்: சொர்ணம். இசை: எம்.எஸ். விஸ்வநாதன்.

எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா இணைந்து நடித்த இந்தப் படம் 07.11.1969 இல் வெளிவந்தது.

எம்.ஜி.ஆர். வெகு இயற்கையாக நடித்த படம். பாடல்கள் சூப்பர் ஹிட்டாக அமைந்தன. சென்னையில் மூன்று தியேட்டர்களில் நூறு நாட்கள் ஓடியது. மதுரையில் 147 நாட்கள், திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் நூறு நாட்களுக்கு மேல் ஓடியது.



எங்கள் தங்கம் படத்தில் புதிய மேக்கப்பில் எம்.ஜி.ஆர் நடத்திய கதாகாலட்சேபம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

1970 ஆம் ஆண்டில் மாட்டுக்காரவேலன், என் அண்ணன், தலைவன், தேடிவந்த மாப்பிள்ளை, எங்கள் தங்கம் ஆகிய 5 படங்களில் எம்.ஜி. ஆர்.நடித்தார்.

மாட்டுக்கார வேலன்

இதில் மாட்டுக்காரவேலன் சூப்பர்ஹிட் படம். ஜெயந்தி பிலிம்சார் தயாரித்த இந்தப் படத்தில் எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் இணைந்து நடித்தனர். ப.நீலகண்டன் டைரக்ட் செய்தார். வசனம் ஏ.எல்.நாராயணன். கண்ணதாசன் பாடல்களுக்கு இசை அமைத்தவர் கே.வி. மகாதேவன்.

இந்தப்படத்தில் எம்.ஜி. ஆருக்கு இரட்டை வேடம்.

கதை

மாட்டுக்காரவேலனும் சட்டத்தரணி ரகுவும் ஒரே தோற்றம் கொண்டவர்கள். சட்ட நாதன் குடும்பத்தினர் சட்டத்தரணி ரகுவை வரவேற்றகக் காத்திருக்க, அங்கே வேலன் வருகிறான். அவனுக்குப் பெரிய விருந்து நடக்கிறது. வேலனை ரகு என்று எண்ணி அவனைக் காதலிக்கிறாள் சட்டநாதன் மகள் லலிதா.

உண்மையைச் சொல்லி விட வேலன் நினைக்கிறான். ஆனால் சூழ்நிலை அவன் வாயைக் கட்டிப் போடுகிறது.

அதே நேரத்தில் ரகு அங்கு வருகிறான். உண்மையை அறிகிறான். தப்பி ஓட நினைத்த வேலனை அங்கேயே தங்க வைத்து வேலன்-லலிதா காதல் வளர உதவுகிறான். (தொடரும்)

# இலங்கையின் போர் வடுக்கள் ஆற்றப்படுமா?




அரசியல் நிலைத் தன்மையானது அகதிகளின் பிரச்சினையில் ஏதாவது தாக்கத்தைச் செலுத்துகிறதா? பல பத்தாண்டுகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நாடானது மீளிணக்கப்பாடு மற்றும் நிலையான சமாதானம் ஆகியவற்றின் மூலம் தனது நாட்டின் அரசியலில் நிலைத்தன்மையை அதிகரிக்க முடியுமா?

இவ்வாறு NEW STRAITS TIMES நாளிதழில், எழுதியுள்ள கட்டுரையில் கேள்விகளை எழுப்பியுள்ளார் மலேசி யாவைச் சேர்ந்த PUTERI NOR ARIANE YAS MIN என்ற வெளி விவகார மற்றும் பாதுகாப்புக் கற்கைகள் ஆய்வாளர். இவரது கட்டுரையைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.

இலங்கையானது பல பத்தாண்டு கால யுத்தத்திற்கு முகங்கொடுத்துத் தற்போது அரசியலில் ஒரு மாற்ற த்தை ஏற்படுத்துகின்ற நாடாகக் காணப்படுகிறது. கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் மைத்திரி பால சிறி சேன நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்வு செய்ய ப்பட்ட பின்னர், அவ் வாண்டு ஓகஸ்ட் மாதம் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற பிரதமர் ரணில் விக்கிரம சிங்க வுடன இணைந்து நாட்டின் அரசியலில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற் கொண்டு வருகிறார்.

இதன்மூலம் நாட் டில் அரசியல் சீர்திரு த்தம் ஒன்றை ஏற்படு த்துவதே இந்த அர சாங்கத்தின் நோக்காகும். இலங்கையின் அரசியல் அபிவிருத்தி தொடர்பாகக் கற்றுக் கொள்ளப்பட வேண்டிய மற்றும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் மீது தாக்கத்தைச் செலுத்தும் மூன்று முக்கிய விடயங்களை இங்கு நோக்க முடியும்.

முதலாவதாக, மைத்திரி அரசாங்கமானது நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதாக வாக்குறுதி வழங்கியது. இதன். பெறுபேறாக, நாட்டின் அரசியல் யாப்பில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டதுடன், நிறைவேற்று ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் நாடாளுமன்று க்கு பரவலாக்கப பட்டன. 18 மற்றும் 19 ஆவது திருத்தச் சட்டங்கள் மூலம் ஒருவர் இரண்டு தடவைகள் மட்டுமே நாட்டின் ஜனாதிப தியாகப் பதவி வகிக்க முடியும். அத்துடன் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களும் பரவலாக் கப்பட்டுள்ளன.


இலங்கை நாடாளுமன்றில் மூன்றாவது பெரும்பான்மைக் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது நாட்டின் எதிர்க்கட்சி யாக உள்ளது. இதன் மூலம் பிரதமர் மற்றும் ஏனைய அரசியற் சக்திகளால் முன்வைக் கப்படும் தீர்மானங்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான அரசியல் அதிகாரத்தை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு கொண்டுள்ளது. இது மட்டு மல்லாது பிரதேச மற்றும் தேசியக் கோட்பாடுகளை வரை வதிலும் அவற்றை அமுல்ப்படுத்து வதிலும் தனது செல்வாக்கைச் செலுத்தக் கூடிய அரசி யல் அதிகாரத்தையும் கூட்ட மைப்பு கொண்டுள்ளது.

நாட்டில் அரசியல் சார் மாற்றங்களைக் கொண்டு வருவதற் கான அரசியல் அதி காரத்தை அரசாங்கம் கொண்டு ள்ளது என்பதை தேர்தல் பெறு பேறுகள் மற்றும் அரசியல் மாற்ற ங்கள் போன்றன சுட்டிக் காட்டுகின்ற போதிலும், மைத்திரி -விக்கிர ம்சிங்க கூட்டணியைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வத ற்கான பாரிய அரசியல் முகாமைத்துவத்தையும் இலங்கையின் தற்போதைய அரசாங்கம் கொண்டிருக்க வேண்டும்.

இரண்டாவதாக, தமிழ் சமூகத்தின் மத்தியல் மேலும்பிரிவினையையும பிரச்சினைகளையும் ஏற்படுத்துவதைத் தடுப்பதற்காகவும் குறைப்பதற்காகவும் தமிழ் மக்களின் உரிமைகளை இலங்கை அரசாங்கம் முதன்மைப் படுத்தி வருகிறது. காணிகளைத் தமிழ் மக்களிடம் மீளவும் கையளித்தல், மக்கள் ஆட்சி யை மீண்டும் கொண்டு வந்தமை, நாட்டிற்குத் திரும்பி வரும் அகதிகள் மற்றும் இடம் பெயர்ந்த மக்கள் அமை தியான வாழ்வைக் கட்டியெழுப்பிக் கொடுப்பதற்கான உத்தரவாதம் வழங்கப்பட்டமை உட்பட பல்வேறு மாற்றங்களை இலங்கையின் தற்போதைய அரசாங்கம் மேற் கொண்டு வருகிறது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்ட தமிழ் அரசியற் கைதிகள் சிலரை அரசாங்கம் விடுவிக்கத் தொடங்கியுள்ளது. (தொடரும்)

# புகையிரதத்துடன் மோதுண்டு ஆட்டோ விபத்து

## இருவர் காயம்



(கொழும்பு)

வேன்னப்புவ- போதல வத்தே மற்றும் லுனுவில புகையிரத நிலையங்களுக்கு அருகாமையில் உள்ள குறுக்கு வீதியில் புகையிரதத்துடன் ஆட்டோ ஒன்று மோதுண்டதில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று காலை சிலாபத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்துடன் குறித்த ஆட்டோ மோதுண்டுள்ளது.

இதன் காரணமாக, சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் புகையிரதம் தாமதித்ததாக புகையிரத கட்டுப்பாட்டாளர் தெரிவித்தார். (இ)

# அடைமழை காரணமாக இ.போ.சவுக்கு நட்டம்

## 7 கோடி ரூபா என மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் இலங்கை போக்குவரத்து சபைக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக ஏற்பட்ட மழையினால் 7 கோடிக்கும் அதிகமாக நட்டம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொதுமுகாமையாளர் ராஜா குணதிலக கூறியுள்ளார்.

இதேவேளை, அனர்த்த நிலைமைகளினால் பணியாளர்களின் வருகை மிகவும் குறைவாக உள்ளமையே இதற்கான காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் சப்ரகமுவ பகுதிகளிலேயே இவ்வாறான நிலை அதிகம் காணப்படுவதாகவும் பிரதி முகாமையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் பல பிரதேசங்களில் பேருந்து டிப்போ நீரில் மூழ்கியுள்ளதால் பல பேருந்துகளில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# மரக்கறிகளின் விலை 25வீதத்தினால் உயர்வு

மரக்கறிகளின் விலை நூற்றுக்கு 25 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாக தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் யு.ஆர்.தயானந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு நேற்று முன்தினம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீரற்ற காலநிலையினால் சந்தைக்கு கிடைக்கும் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பொருளாதார மத்திய நிலையத்திற்கு கிடைக்கும் மத்திய மலைநாட்டு மரக்கறி வகைகள் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளன.

அவ்வாறு கிடைக்கும் மரக்கறிகளும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

சீரற்ற காலநிலையினால் மரக்கறி செய்கை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் நாட்களில் மரக்கறிகளின் விலை மேலும் உயர்வடையக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோ கறிமிளகாய் 230 ரூபாவிற்கும், ஒரு கிலோ பீற்றூட் 110 ரூபாவிற்கும், ஒரு கிலோ பச்சை மிளகாய் 200 ரூபாவிற்கும், ஒரு கிலோ தக்காளி 110 ரூபாவிற்கும், ஒரு கிலோ கரட் 100 ரூபாவிற்கும், ஒரு கிலோ கத்தரிக்காய் 100 ரூபாவிற்கும், ஒரு கிலோ கோவா 80 ரூபாவிற்கும், ஒரு கிலோ லீக்ஸ் 100 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளார். (இ)

# கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை

(மல்லாவி)

கிளிநொச்சி புளியம் பொக்கணை பகுதியில் கடந்த 17 ஆம் திகதி பிற்பகல் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலின்போது 56 போத்தல் கசிப்பு, மோட்டார் சைக்கிள், கைத்தொலைபேசி மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, தர்மபுரம், கட்டைக்காடு ஆகிய பகுதிகளில் சட்டவிரோத கசிப்பு விற்பனை உற்பத்திகள் என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்நிலையில் தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வரும் விசேட சுற்றிவளைப்பு தேடுதல்கள் மூலம் கசிப்பு உற்பத்தி மையங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இதனுடன் தொடர்புபட்ட பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினூடாக தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன.




நேற்று முன்தினம் பிற்பகல் தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற விசேட தகவல்களை தொடர்ந்து தர்மபுரம் புளியம்பொக்கணை பகுதியில் தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எம்.டி.என்.சதுரங்க மற்றும் பொலிஸ் அதிகாரிகளான ஐ.றொசான், ரீ.தவச்சந்திரன், ஜெயசிங்க ராஜபக்ஷ உள்ளிட்டோர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலின்போது 56 போத்தல் கசிப்பு,இரண்டு பரல்கள் கசிப்பு உற்பத்தி உபகரணம் மற்றும் கைத்தொலைபேசி, மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை கைப்பற்றியதுடன் இதனுடன் தொடர்புபட்ட சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-15)

யாழில் அரசர்களால் அமைக்கப்பட்ட

# நீர் நிலைகளை பாதுகாப்போம்

## அமைச்சர் சொய்சா அழைப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அரசர்களால் நீர்வளத்தை பாதுகாப்பதற்கென முன்னுதாரணமாக அமைக்கப்பட்ட நீர் நிலைகள் தற்போது கவனிப்பாரற்று இருப்பது ஆபத்தானது.

எனவே அவற்றை புனரமைப்புச்செய்வதற்கு அனைத்து உதவிகளையும் மேற்கொள்ள எமது அமைச்சு தயாராக வுள்ளது என நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சின் கீழ் உள்ள நீர் வள சபையின் வடக்கு மாகாணத்துக்கான அலுவலகம் நேற்றைய தினம் யாழ்.பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த அரசில் 11 ஆயிரம் இளைஞர்களை விடுதலை செய்யும் போது வாயை மூடிக்கொண்டு இருந்த தென்னிலங்கை இனவாதிகள் தற்போது நல்லாட்சி அரசாங்கத்தால் மிகுதியாகவுள்ள இளைஞர்களை வீடுதலை செய்யும் போது இனவாதம் பேசுகிறார்கள்.

ஆகவே சந்தர்ப்பத்துக்கேற்ப இனவாதம் பேசும் அரசியலுக்கு மத்தியிலேயே எமது நாடு உள்ளது.

இந்த நல்லாட்சி அரசாங்கமானது, இன, மத, மொழி வேறுபாடின்றி பல அபிவிருத்தி திட்டங்களை செய்கிறது.

அதேபோல வடக்கு சிறந்த பல அரசியல் தலைமைகளை கொடுத்துள்ளது. அவர்கள் இறைமைக்காக உயிர் தியாகம் செய்துள்ளனர்.

கடந்த வருடம் நான் வன வள பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டேன். அப்போது இங்குள்ள குளங்களின் நிலைமைகளை பார்த்த போது இவற்றை சீர் செய்தால் நீர்வளம் சிறப்பாக இருக்கும்என எண்ணினேன். அதிர்ஷ்டவசமாக தற்போது இவ்வமைச்சு எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

பண்டைய காலத்தில் இம்மண்ணை ஆண்டமன்னர்கள் தூரநோக்குடைய சிந்தனையுடன் பல குளங்கள், ஏரிகள் போன்ற நீர்நிலைகளை உருவாக்கினார்கள்.

ஆனால் தற்போது அவர்களின் நோக்கம் சிதைந்து போய் அக் குளங்கள்,ஏரிகள் புனரமைக்கப்படாமல் கட்டடங்கள்,வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இவை ஆபத்தான செயற்பாடு.எனவே இவற்றை எல்லாம் உடனடியாக சீர் செய்து நீர்வளம் முகாமைத்துவம் செய்யப்பட்டு வடக்கை விவசாயத்தில் மேலோங்க செய்ய வேண்டும்.

விவசாயத்திற்கு தேவையான நிதி வளம் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் பெற்று தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மக்கள் நலனில் செயலாற்றுவதே அரசின் நோக்கம். இதில் எந்தவித அரசியல் கலப்பும் இல்லை.மக்கள் நலனே முக்கியம். நாம் செய்யும் அபிவிருத்திகள் ஊடாக நாட்டில் உள்ள அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன் இருக்க வேண்டும் என்பதே எமது நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9-4)

# ஆண்டுப் பொதுக் கூட்டம்

கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரம ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆச்சிரம பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.மேற்படி கூட்டத்தில் ஆச்சிரம அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு குருபீடாதிபதி ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் கேட்டுள்ளார். (இ)

# நிலப்பயன்பாடு மிகமிக முக்கியம்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நிலப்பயன்பாடு என்பது மிக மிக முக்கியமான ஒன்றாகும் என மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் காணிப்பயன்பாடுகள் தொடர்பான மாவட்ட பயன்பாட்டுக் குழுவின் கலந்துரையாடல் கடந்த 17 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் நிலப்பயன்பாடு என்பது மிக முக்கியமானது. நிலங்கள் என்பது மிகப் பெரிய வளங்கள். அந்த வளத்தினை சரியாகப்பயன்படுத்துவது என்பது மிக மிக முக்கியமானது. நிலப்பயன் பாடு தொடர்பாக நல்ல ஒரு திட்டத்தை இந்த குழு ஏற்பாடு செய்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் கரைச்சி ,கண்டாவளை ,பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் பொதுத் தேவைக்கான காணிகளை பெற்றுக் கொள்வது தொடர்பாக காணி பயன்பாட்டுக் குழுவின் அனுமதிகள் பெறப்பட்டன.

இதில் மாவட்ட அரசாங்க அதிபர் ,மேலதிக அரச அதிபர் எஸ்.சத்தியசீலன் ,உதவிப்பிரதேச செயலர் ரீ.பிருந்தாகரன், திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.மோகனபவன், மாகாண காணி ஆணையாளர் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர்கள், காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-15)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-19.05.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.03 | 147.85 |
| பிரிட்டன் | பவுண்ட் | 209.13 | 214.68 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 160.62 | 167.15 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 144.82 | 151.01 |
| கனடா | டொலர் | 109.65 | 114.31 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 102.94 | 107.87 |
| சிங்கப்பூர் | டொலர் | 103.79 | 107.88 |
| இந்தியா | ரூபா | 2.1698 | ------- |
| சீனா | யுவான் | 22.2740 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.5740 |
| குவைத் | டினார் | 482.8077 |
| ஓமான் | ரியால் | 378.5763 |
| கட்டார் | ரியால் | 40.0346 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8604 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6804 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 140 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 95 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 180 | 160 | 100 |
| தக்காளி | 140 | 200 | 220 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 40 | 60 |
| கோவா | 150 | 100 | 120 | 120 | 140 |
| கரட் | 150 | 100 | 120 | 200 | 100 |
| பூசணி | 60 | 30 | 60 | 60 | 40 |
| புடோல் | 120 | 50 | 100 | 160 | 120 |
| வாழைக்காய் | 140 | 30 | 50 | 40 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 120 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 90 | 100 | 90 |
| பாகற்காய் | 150 | 100 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 180 | 200 | 180 | 160 | 200 |
| லீக்ஸ் | 140 | 100 | 140 | 160 | 150 |
| பீற்றூட் | 120 | 110 | – | 160 | 100 |
| கறிமிளகாய் | 150 | 100 | 150 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 180 | 100 | 100 | 200 | 150 |
| போஞ்சி | 250 | – | 200 | 300 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 80 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 15 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 500 | 300 | 500 | 300 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 15-30 | 50 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 150 | 140 | 150 | 160 | 160 |
| வெங்காயப்பூ | 400 | – | – | – | – |
| முள்ளங்கி | 100 | 60 | 100 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 30 | 30 | – |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | – | 80 | – | 80 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கிளிநொச்சி மீண்டும் விடுதலைப்புலிகள் வசமானது 184

இந்தச் சண்டையின் முடிவில் 02.11.1999 அன்று ஒட்டுசூட்டான் நகரைக் கைப்பற்றி விட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

**தொடர்ந்து சண்டை**

இந்த நிலையில் இரு தரப்பினருக்கும் இடையே 3 ஆம் திகதி அன்றும் சண்டை தொடர்ந்து நீடித்தது. கனகராயன் குளம் இராணுவ முகாமில் விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினார்கள்.

ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய பகுதிகளிலும் சண்டை நடந்தது. இதில் நெடுங்கேணி நகரத்தை இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து மீட்டு விட்டதாக விடுதலைப்புலிகள் அறிவித்தனர்.

**2 நகரங்கள் மீட்பு**

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் வடகிழக்கு முல்லைத்தீவு அருகே ஒட்டுசுட்டான் நகரம் உள்ளது. அதில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் நெடுங்கேணி நகரம் உள்ளது. இந்த 2 நகரங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றி விட்டனர்.

இதுபற்றி இராணுவத் தரப்பில் கூறும்போது ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய பகுதிகளில் விடுதலைப்புலிகளுடன் கடும் சண்டை நடந்து வருகிறது என்று மட்டும் தெரிவித்து இருக்கிறது. 2 நகரங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினார்களா என்பது பற்றித் தெளிவுபடுத்தவில்லை.

விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் ஏராளமான இராணுவ வீரர்கள் காட்டுக்குள் ஓடி விட்டனர்.

இராணுவம் விட்டுச் சென்ற ஆயுதக் கிடங்குகளை விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள். ஏராளமான இராணுவ வாகனங்கள் விடுதலைப்புலிகளின் வசமாகிவிட்டன.

**குண்டு வீச்சு**

கனகராயன் குளத்தில் விடுதலைப்புலிகள் நடத்திய ரொக்கட் தாக்குதலில் இராணுவ முகாம் பலத்த சேதம் அடைந்தது. 8 கட்டடங்கள் இடிந்தன. அதில் ஓர் ஆயுதக் கிடங்கும் வைத்தியசாலை தலைமையகக் கட்டடமும் அடங்கும்.

சிங்கள இராணுவ தலைவர் மயிரிழையில் உயிர் தப்பினார். பல இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். 284 பேர் காயம் அடைந்தனர்.

**மேலும் 2 இடங்கள் மீட்பு**

தொடர்ந்து இரு தரப்பினரிடையேயும் மோதல்கள் நீடித்தன. 4 ஆம் திகதி நடந்த சண்டையில் மாங்குளம் என்ற மத்திய நகரம் உட்பட 2 இடங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள்.

முதலில் அம்பகாமம் என்ற பகுதியை விடுதலைப்புலிகள் மீட்டனர். இந்தக் கிராமத்தை ஒக்டோபர் மாதம் இராணுவத்திடம் விடுதலைப்புலிகள் இழந்திருந்தது. குறிப்பிடத்தக்கது.

அம்பகாமம் பகுதியில் இருந்த இராணுவ முகாம்கள் அழிக்கப்பட்டன. அதில் இராணுவத்தரப்பில் பலர் கொல்லப்பட்டனர்.

மாங்குளத்தையும் சேர்த்து மொத்தம் 4 முக்கிய இராணுவ முகாம்கள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் விடுதலைப்புலிகளின் வனொலி அறிவித்தது. இந்தப் பகுதிகள் அனைத்தும் விடுதலைப்புலிகளிடம் இருந்து இராணுவம் கைப்பற்றியவை ஆகும்.

**கடும் சண்டை**

மாங்குளம் பிடிபட்டதைத் தொடர்ந்து கனகராயன்குளம், புளியங்குளம் ஆகிய 2 இடங்களைக் கைப்பற்ற விடுதலைப்புலிகள் கடும் சண்டையில் ஈடுபட்டனர்.

தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் இராணுவம் பின்வாங்கி வவுனியாவை நோக்கிச் சென்றனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

வவுனியாவில் இருந்துதான் கடந்த 1997 ஆம் ஆண்டு இராணுவம் வன்னிப் பகுதியைக் கைப்பற்றக் கடும் போர் நடத்தியது.

இந்தச் சண்டையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினர் கொல்லப் பட்டனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

ஆனால் இராணுவத்தரப்பில் இருந்து அதிகார பூர்வமாக உயிர் சேத விபரம் அறிவிக்கப்படவில்லை என்றும் விடுதலைப்புலிகளில் முக்கிய தலைவர்களில் ஒருரான ராயல் கொல்லப்பட்டார் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**உடல்கள் தகனம்**

நூற்றுக்கணக்கான சிங்கள சிப்பாய்களின் உடல்கள் இராணுவ மரியாதையுடன் விடுதலைப்புலிகள் தகனம் செய்தார்கள். செஞ்சிலுவைச்சங்க அமைப்புக்களைக் காட்டுக்குள் செல்ல இராணுவம் அனுமதி மறுத்துவிட்டதைத் தொடர்ந்து வேறு வழியில்லாமல் விடுதலைப்புலிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

**இராணுவம் மறுப்பு**

ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்களச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பதை இராணும் ஏற்கவில்லை. தங்கள் தரப்பில் இருந்து 300 முதல் 500 சிப்பாய்கள் இறந்ததாகக் கூறினார்கள்.

**இரகசிய விமானத்தளம்**

21.12.1999 அன்று நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலை மனதில் கொண்டுதான் விடுதலைப்புலிகள் இந்த அதிரடித்தாக்குதலை நடத்தினார்கள் என்று கூறப்பட்டது.



கிளிநொச்சியில் போர் நடந்தபோது எடுத்த படம்.

(தொடரும்)

புரிந்துகொள்ளாத போதும் பொறாமைப்படும் போதும் மனிதன் மற்றவனை முட்டாளாக கருதிவிடுகிறான். ~ சாக்ரடீஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஜெயலலிதா அம்மணிக்கு ஈழத்தமிழரின் வாழ்த்து

தமிழகத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலில் செல்வி ஜெயலலிதா அம்மையார் வெற்றிபெற்று தமிழகத்தின் முதலமைச்சராக மீண்டும் தெரிவானார் என்ற செய்தியால் ஈழத்தமிழர்கள் மகிழ்வுற்றுள்ளனர்.

நடந்து முடிந்த சட்ட சபைத் தேர்தல் பிரசாரத்தின் போது செல்வி ஜெயலலிதா அவர்கள் ஈழத்தமிழர்கள் தொடர்பில் துணிந்து சில தீர்மானங்களை அறிவித்திருந்தார்.

அந்தத் தீர்மானங்கள் நிறைவேறுவது, நிறைவேறாமல் போவது என்பதற்கு அப்பால்,

ஈழத்தமிழர்கள் தொடர்பில் குறிப்பிட்ட தீர்மானங்களை அறிவித்தால் தனக்கு இருக்கக் கூடிய எதிர்ப்புக்கள் பற்றி இம்மியும் கவலை கொள்ளாமல், இதுதான் என்று துணிச்சலோடு எங்கள் தொடர்பில் அவர் அறிவித்த தீர்மானங்கள் எமக்கு ஆறுதலை தருவதாகும்.

இது மட்டுமன்றி; இலங்கையில் நடந்தது தமிழின அழிப்பு என்று சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றியதுடன்,

ஈழத்தமிழர்களின் உரிமை தொடர்பிலும் சட்டசபையில் முக்கியமான தீர்மானங்களை கொண்டுவந்த பெருமை செல்வி ஜெயலலிதாவையே சாரும்.

தமிழக முதலமைச்சர் எடுக்கின்ற தீர்மானங்கள் என்பது, தமிழக மக்கள் ஈழத்தமிழர்களின் பக்கபலமாக இருக்கிறார்கள் என்பதை இலங்கை அரசுக்கும் இந்திய மத்திய அரசுக்கும் ஏன்? சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்துவதாக அமையும்.

2009ஆம் ஆண்டில் தமிழகத்தின் முதல்வராக கலைஞர் கருணாநிதி இருந்தார். மத்தியில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி செய்தது.

கலைஞர் கருணாநிதி முட்டுக்கொடுத்த காங்கிரஸ் ஆட்சி, ஈழத்தமிழர்களை கொன்றொழிப்பதற்கு இலங்கை அரசுக்கு பக்க பலமாக இருந்தது என்பதை எவரும் மறுதலித்து விட முடியாது.

ஈழத் தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டிய கலைஞர் கருணாநிதி உண்ணாவிரதம் இருப்பதாக நாடகம் நடித்தார். அரசியலில் அவர் நடித்த இறுதி நாடகம் அதுவாயிற்று.

2009 இல் வன்னிப் நிலப்பரப்பில் யுத்த கொடூரம் நடந்தபோது கலைஞர் கருணாநிதி நினைத்திருந்தால், அப்பாவி தமிழ் மக்களைக் காப்பாற்றியிருக்க முடியும்.

அதைச் செய்யாத அவர் ஆட்சியை இழக்கும் பரிதாபத்திற்கு ஆளானார்.

இது போதாதென்று 2016 மே 16 ஆம் திகதி தமிழக சட்டசபைத் தேர்தல் நடந்து அதில் கலைஞர் கருணாநிதி மண் கௌவினார். செல்வி ஜெயலலிதா வெற்றி பெற்று முதலமைச்சரானார் என்ற செய்தி 2016 மே 19 இல் வெளியாகியுள்ளது.

ஆம், தமிழர்கள் அன்றும் இன்றும் அழுத கண்ணீர், காரணமானவர்களை அறுத்து விழுத்தி வருகிறது என்பது மட்டும் உண்மை.

ஈழத்தமிழர்களை வதைத்த மகிந்த ராஜபக்ஷ பதவியிழந்தார்; அவருக்கு உதவிய இந்திய காங்கிரஸ் கட்சி ஆட்சியிழந்தது; காங்கிரஸுக்கு முட்டுக் கொடுத்த கலைஞர் கருணாநிதி இனி முதலமைச்சர் ஆகவே முடியாது என்று உணரும் அளவில் தோல்வியைக் கண்டார்.

ஆக, ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் செல்வி ஜெயலலிதா மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சர் ஆனார் என்ற செய்தி ஈழத்தமிழர்களுக்கு நெஞ்சம் நிறைந்த ஆறுதலை தருகிறது.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு ஈழத்தமிழர்கள் தங்கள் அழு கண்ணீரை துடைத்துக் கொண்டு அம்மா எங்கள் வாழ்த்துக்கள் என்று கூறுகின்றனர்.

இந்த வாழ்த்து போல் செல்வி ஜெயலலிதா எவரிடமும் பெற்றிருக்க முடியாது. அந்தளவுக்கு இது இதயத்தால் சொல்லும் வாழ்த்தாகும்.

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களுக்கான (2016 பிரிவு) கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும். இதில் மாணவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (இ

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

(முக்கொம்பன்)

மேசன் வேலை பார்க்கும் போது மின்சாரம் தாக்கியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் கடந்த 13 ஆம் திகதி கொழும்பு கொட்டகேன பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மீசாலை கிழக்கினை சேர்ந்த இராமச்சந்திரன் உதயரூபன் (வயது 22) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

சடலமானது கொழும்பு போதனா வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டதன் பின்னர் நேற்று இரவு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணையை கொழும்பு கொட்டகேன பொலிஸார் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-283)

# புதிய நிர்வாக சபைத்தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ

# 267 ஆசிரிய மாணவர்கள் ஆசிரிய கலாசாலைக்கு தெரிவு

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2016/2017 ஆம் கல்வியாண்டில் புதிதாக ஆசிரிய பயிற்சியைப் பெறுவதற்கு 267 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் அறிவித்துள்ளார்.

இதன்படி ஆரம்பக் கல்வி 148, கிறிஸ்தவ சமயம் 46, கர்நாடக சங்கீதம் 33, உடற் கல்வி 32, விசேட கல்வி 01, வர்த்தகம் 07 என ஆசி ரிய மாணவர்கள் புதிதாகக் கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற்றுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி தமது பதிவுகளைக் கலாசாலையில் மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

இந்தவகையில்பதிவுகளை மேற்கொள்ள வரும்போது பிரகடனப்படிவம், பிறப்புச் சான்றிதழ், நியமனக் கடிதம், தேசிய அடையாள அட்டை , சம்பவத் திரட்டுக்குறிப்பு (பாடசாலையில் கடமை ஏற்றுக் கொண்டமை தொடர்பானது) க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு, க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு, தனியார் பாடசாலை அல்லது பிரிவேனாவில் இருந்து வருபவராயின் அது தொடர்பான பிரகடனப் படிவம், சம்பளம் பெறுவதற்கு வசதியாக இலங்கை வங்கி கணக்கு இலக்கம் (BOC) என்பவற்றின் மூலப்பிரதியும் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதியும் எடுத்து வரப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலாசாலையில்பதிவுகளை மேற்கொண்ட நாள் முதல் கற்கை நெறி ஆரம்பமாவதால் அதற்குரிய ஆயத்தங்களுடன் புதிதாக அனுமதி பெறும் ஆசிரியர்கள் வருகை தரவேண்டும் எனவும் அதிபர் கேட்டுள்ளார். (இ

# இறுவெட்டு வெளியீடு

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மருதடி விநாயகன் மலரடி போற்றி என்ற இறுவெட்டு வெளியீட்டு விழா இன்று முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக கணக்கியல்துறை பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் ஆலய பிரதம குரு பண்டிதர் கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். முல்லைத்தீவு, உடையார்கட்டு மகா வித்தியாலய நடன ஆசிரியர் "நட்டுவ ஆசான்" "நிருத்திய வேந்தன்" ந.குமரவேள் வாழ்த்துரை வழங்குவார்.

கவிஞர் "ஞானகதாசுரபி" பிரம்மஸ்ரீ குமாரசுவாமிநாத சர்மா அறிமுகவுரையும் ஆற்றுவார்.

யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை தலைவர் பேராசிரியர் க.தேவராஜா இறுவெட்டு வெளியீட்டுரையை ஆற்றவுள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபை ஓய்வு நிலை உத்தியோகத்தர் இ.சிவனேசன் இறுவெட்டை வெளியிட சாயி ஸ்ரோர்ஸ் க.சிவராசா பெற்றுக்கொள்வார்.

அதனைத் தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பும் நடைபெறும். (இ

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை **யாழ்.பிரதேசத்தில** பூதர்மடம், கோப்பாய் சந்தி, நாவலடி, இருபாலை, வட்டக் குளம், கட்டைப்பிராய், இலங்கைநாயகி, இராமலிங்கம், ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டு, கல்வியங்காடு,பாற்பண்ணை, முடமாவடி கிளிகடை சந்தி, திருநெல்வேலி சந்தை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** தெற்கிலுப்பைக்குளம் பிரதேசம், இரணையிலுப்பைக்குளம், சாஸ்திரிகூழாங்குளம், ஈச்சங்குளம், கிடாச்சூரி, . காக்கையன் குளம், பூம்புகார், நொதேர்ண் பாம், ஆசிரியர் தொழில்நுட்பக்கல்லூரி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)




## இறைவன் கருணையுள்ளவன்

❖ எல்லாப் புகழும் அனைத்துலகிற்கும் அதிபதி ஆகிய இறைவனுக்கே உரியதாகும். அவன் மாபெருங் கருணையாளனாகவும், தனிப்பெருங் கிருபையாளனாகவும், இறுதித் தீர்ப்பு நாளின் அதிபதியாகவும் இருக்கின்றான்.

❖ உங்கள் இறைவன் ஒரே இறைவன் தான் அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடையோனாகிய அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை (இந்த உண்மையை அறிந்து கொள்ள சான்று வேண்டுமாயின்)

❖ மனிதர்களைப் படைத்து வாழ்வாதாரம் வழங்கியதோடு நின்றுவிடாமல், தன் தூதர்கள் வாயிலாக அவர்களை நேர் வழியில் செலுத்தும் பொறுப்பையும் இறைவனே ஏற்றுக் கொண்டான். நேர்வழியை அருள்வதும் இறைப்பண்புகளில் ஒன்றாகும்.

❖ உங்களின் இறைவன் கருணை பொழிவதைத் தன் மீது கடமையாக்கிக் கொண்டுள்ளான். உங்களில் எவரேனும் அறியாமையால் ஒரு தவறைச் செய்துவிட்டு பின்னர் அதற்காக மன்னிப்புக்கோரி, மேலும் தன்னைத் திருத்திக் கொண்டால் திண்ணமாக இறைவன் (அவரை) மன்னித்து விடுகின்றான் மேலும் அவருடன் இரக்கத்தோடு நடந்து கொள்கின்றான்.

**வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து**



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## சரணாகதியும் பொறுப்பும்

"நீ சரணடை, கடவுள் எல்லாவற்றையும் நடத்தட்டும்" எனச் சிலர் கூறுவர். மற்றவர் "இது என்னுடைய பொறுப்பு" என்பர். பக்தர்கள் "எல்லாம் அவன் செயற்பட நடக்கும்" என்பர். அப்போது உன் குறிக்கோளை அடைய நீ எதையும் எளிதாக எடுத்துக்கொள்கிறாய்.

நாம் இங்கு வித்தியாசத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். சரணாகதி என்பது " எல்லாம் அவன் செயல்" "அவன் செயல்" எனும்போது உலகம் முழுவதற்கும் பொறுப்பு நீ ஏற்றுக்கொள்வதுதான்!.

இது ஒன்றுக்கொன்று முரணாகத் தெரிந்தாலும் அலை ஒன்றையொன்று சார்ந்தவை. எவ்வளவுக்கெவ்வளவு நீ சரணாகதியடைகிறாயோ அவ்வளவுக்கவ்வளவு நீ பொறுப்பாளியாகிறாய்.

பொறுப்பில்லாதவன் சரணாகதி அடைய முடியாது. சிலர் ஏன் பொறுப்பில்லாமல் இருக்கிறார்கள்? அவர்கள் சோம்பேறிகள் அல்லது பயந்தாங்கொள்ளிகள் அல்லது இரண்டுமே. நீ அப்படியிருந்தால், சரணாகதி அடைய முடியாது.

முழுமையான பொறுப்புணர்வுதான் முழுமையான சரணாகதி. இதைச் சீரணிப்பது சிறிது கடினம்தான். ஆனாலும் இதுதான் உண்மை.

நீ ஞானத்தைச் சரணடைந்து விட்டாய் என்று வைத்துக்கொள். 'நீ அதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறாய். அதை மேலும் மேலும் விரிவடையச் செய்வது உன் பொறுப்பாகும். பொறுப்புணர்வு என்பது இந்நொடியில் நம் உயிர்ச்சக்தியின் அதிசக்தி வாய்ந்த வெளிப்பாடு ஆகும்.

நீ பொறுப்பேற்றுக்கொள்ளும்பொழுது தடைகளைச் சந்திக்க நேர்ந்தால் சரணடை.

நீ அதிர்ச்சியடையும்போது சரணடைவது ஒன்றே பொறுப்புணர்வுக்கு அடிப்படைச் சக்தியாகும். நான்தான் செய்பவன் என்ற சுமையிலிருந்து உன்னை விடுவித்து நீ முன்னேற சக்தியளிக்கிறது. நான் செய்பவன் (கர்தா) என்ற எண்ணமற்று, பொறுப்பேற்றுக்கொள்வதும் சரணடைவதும் ஞானிகளின் திறன்.

முழுக்க முழுக்க பொறுப்பில்லாது இருக்க உன்னால் முடியாது. அளவிற்குட்பட்ட பொறுப்பு உன்னைச் சோர்வுள்ளவனாகவும் சக்தியற்றவனாகவும் செய்கிறது.

அளவற்ற பொறுப்பு உன்னைச் சக்திடையச் செய்து ஆனந்தத்தைத் தருகிறது. இந்தக் காலத்திற்குள் இந்தச் செயலைச் செய்து முடிக்க வேண்டும் என்ற காலவரைக்குட்பட்ட குறிக்கோளை, உறுதி செய்து கொள்வது நமது சக்தியை ஊக்குவிக்க வழி செய்கிறது.

அஞ்சயன் சிறப்பாட்டம்

# நண்பர்களின் ஒரு நாள் சமர்-2016

# முள்ளியவளை வித்தியானந்தா வெற்றி





(முள்ளியவளை)

நண்பர்களின் சமர்- 2016 துடுப்பாட்டப் போட்டியின் தொடர்ச்சியாக கடந்த சனிக்கிழமை 14 ஆம் திகதி யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி அணிக்கும் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணிக்கு இடையிலான ஒருநாள் போட்டியில்அஞ்சயனின்அபார துடுப்பாட்டத்தினால் இரண்டு இலக்குகளினால் வெற்றியீட்டியது முல்லை. வித்தியானந்தா. நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய கல்லூரி அணித்தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தமைக்கு அமைவாக வித்தியானந்தா அணியினர் பந்து வீச்சில் ஈடுபட்டனர்.

இதன்போது முதல் 10 பந்துப்பரிமாற்றங்களின் போது வேகப்பந்து வீச்சினை மேற்கொண்ட போதும் ஒரு இலக்கினை மட்டுமே அவர்களால் கைப்பற்ற முடிந்தது. அதன் பின் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியினர் தொடர்ந்து இலக்குச் சரிவின்றி நின்று நிதானமாக ஆடி ஓட்ட சராசரியினையும் அதிகரித்த வண்ணமே இருந்தனர்.

இந்நிலையில் வித்தியாணந்தா அணியினர் கள வியூகங்களை மாற்றியமைத்து சுழல் பந்து வீச்சாளர்களை பந்து வீச்சில் ஈடுபடுத்தினர்.

இவர்களின் களவியூகத்திற்கு அமைய கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலய அணியினரின் இலக்குகளும் வீழ்ந்து கொண்டிருந்தன.

இறுதியாக கனகரத்தினம் அணியினர் தமது அனைத்து இலக்குகளையும் பறிகொடுத்து 142 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர்.

இதில் கனகரத்தினம் கல்லூரி அணி சார்பாக அதிக பட்ச ஓட்டங்களாக விஷ்ணுகானன் 39,பிரசாந்த் 36, ஜிலக்சன் 22 பெற்றிருந்தனர்.

பந்து வீச்சில் வித்தியானந்தா அணி சார்பாக மதுசன் 4, தர்சன் 3, அருணா 2, பீற்றர் ஒரு இலக்குகளை வீழ்த்தியிருந்தனர். பின்னர் 143 ஓட்டங்களை பெற்றால்வெற்றி என்ற இலக்கோடு துடுப்பெடுத்தாட களமிறங்கிய வித்தியானந்தாவின் ஆரம்ப இலக்குகள் வேகமாக வீழ்த்தப்பட்ட போதும் மத்திய தரை வரிசை வீரர்களான அஞ்சயன், பவின்சன் ஆகிய இருவரும் நின்று நிதானித்து மிகவும் பொறுப்புணர்வுடன் அணியினை வெற்றி இலக்கை நோக்கி நகர்த்திய வண்ணம் இருந்தனர்.

இதனால் போட்டி இறுதி வரை மிகவும் பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் அமைந்திருந்தது.

இறுதியாக இரு இலக்குகள் கைவசம் இருக்கையில் வெற்றி இலக்கை எட்டினர் வித்தியாணந்தா அணியினர். இதில் வித்தியானந்தா அணி சார்பாக அதிக பட்ச ஓட்டங்களாக அ.அஞ்சயன் 62 ஓட்டங்களையும் 23 ஓட்டங்களையும் 17 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றிருந்தனர்.

பந்து வீச்சில் கனகரத்தினம் அணி சார்பாக விதுசன், சஞ்சீவன், பிரசாந்த் ஆகியோர் தலா இரு இலக்குகளை வீழ்த்தியிருந்தனர்.

இதன் மூலம் இரண்டு இலக்குகளினால் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணியினர் வெற்றியீட்டிக் கொண்டனர்.

இப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக வித்தியாணந்தாவின் அஞ்சயனும் சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியின் மதுசனும் சிறந்த களத் தடுப்பாளராக ஸ்ரான்லியின் சுஜிகரனும் ஆட்ட நாயகனாக அணிக்காக 62 ஓட்டங்களை பெற்று இரு பிடியெடுப்புகளை நிகழ்த்தியிருந்த வித்தியானந்தாவின் அ.அஞ்சயனும் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (சு-302)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

சங்கானை உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

போட்டிகள் யாவும் வட்டுக்கோட்டை YMHA மைதானத்தில் நடைபெறும்.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 151 6024, 077 849 1971 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பியன் ஆகும் அணிக்கு பெறுமதியான வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசும் வழங்கப்படும் . (சு)

## இன்றைய போட்டி



பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் கிளிநொச்சி ஜெயமீட்பர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (சு)

## அமரர் கல்பனா ஞாபகார்த்த கரப்பந்தாட்டம்

அம்பாள் விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் கல்பனா சண்முகரட்ணம் ஞாபகார்த்த வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

போட்டிகள் யாவும் யூனியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் விளையாட்டுக்கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகள் பங்குபற்ற முடியும்.

போட்டிக் கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படும்.

விண்ணப்பிக்கும் அணிகள் 077 254 7995, 077 387 0456, 077 757 0577 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

தேவகிங்ஸ்லி சிறப்பாட்டம்

# கிளிநொச்சி சென்.மேரிஸ் அடுத்த சுற்றுக்கு தெரிவு







(யாழ்ப்பாணம்)


பருத்துத்துறை உதை பந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதை பந்தாட்ட தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில் மாதகல் சென். தோமஸ் அணியினை கிளிநொச்சி சென். மேரிஸ் அணி சந்தித்தது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரு அணிகளும் கோல் பெறும் வேகத்துடன் விளையாடியது. ஆட்டத்தின் 24 ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் வி.க.வீரர் தேவகிங்ஸ்லி முதலாவது கோலினை அடித்தார்.

அதனைத் தொடர்ந்து கோலினைப்பெறசென்.தோமஸ் யூத் கடும் முயற்சிகள் மேற்கொண்ட போதும் கோல் பெற முடியாது போக ஆட்ட நேர முடிவில் 1:0 என சென். மேரிஸ் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

போட்டியின்ஆட்ட நாயகனாக சென்.மேரிஸ் தேவகிங்ஸ்லி தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப் பரிசு மற்றும் பதக்கத்தினை யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் விஜிதரன் வழங்கி கௌரவித்தார். (சு)

# மரம் வீழ்ந்து வீடு, கடை சேதம்



(கோப்பாய்)

நேற்று முன்தினம் வீசிய கடும் காற்றின் காரணமாக உரும்பிராய் சந்திக்கு அண்மையாக மானிப்பாய் வீதியோரத்தில் நின்ற மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் அருகில் இருந்த வீடும் கடை ஒன்றும் சேதமடைந்துள்ளது.

கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்ததை தொடர்ந்து வீசிய கடும் காற்றின் காரணமாகவே நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் குறித்த மரம் வீட்டின் கூரை மீது சரிந்து விழுந்துள்ளது.

வீட்டின் அறையில் சிலர் நித்திரையில் இருந்தபோதும் தெய்வாதீனமாக யாருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படாத போதும் வீட்டின் ஒரு பகுதியும் அருகில் இருந்த பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அத்துடன் கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதிகளில் பெருமளவான வெங்காயம் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கனத்த மழை வெள்ளம் காரணமாக வெங்காயம் அழிவடைந்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ள னர். (செ-87)

# பிள்ளையானுக்கு பிணை மறுப்பு

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி சிவபாதம் பிணை வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை பிள்ளையான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் யூன் மாதம் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பிள்ளையான் உட்பட மேலும் நால்வர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# சொத்துக்களை பாதுகாக்க இராணுவப் பாதுகாப்பு

(கொழும்பு)

இடம்பெயர் மக்களின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மழை வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக பாதிப்புக்களை எதிர்நோக்கிய மக்களின் சொத்துக்களை பாதுகாக்க இன்று முதல் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெறற விசேட செய்தியாளர் சந் திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

சொத்துக்கள் களவாடப்பட்டு விடும் என்ற அச்சத்தினால் சிலர் ஆபத்துக்களின் போதும் சொந்த இடங்களை விட்டு வெளியேறாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனினும், எச்சரிக்கை விடுக்கப்படும் போது அந்த இடங்களை விட்டு வெளியேற வேண்டும் என தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அதிகளவு வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்தம் ஏற்படும் போது வீடுகளில் தங்கியிருப்பது அபாயகரமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# வாகன விபத்தில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் ஆட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 11.00 மணியளவில் ஆனைக்கோட்டை கூழாவடி மேற்கு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் கூழாவடி நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான யூனியர் தனிஸ்லாஸ் (வயது 21) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

விபத்து தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள இடம் பெற்று வருகின்றன. (செ-30)

# நாடாளுமன்ற அமர்வு முன்கூட்டியே நிறைவு

சீரற்ற காலநிலை காரணமாக நேற்றைய தினம் நாடாளுமன்ற அமர்வுகள் முன்கூட்டியே நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டது.

வெள்ள அனர்த்தம் காரணமாக நேற்றைய தினம் நாடாளுமன்ற அமர்வுகள் பிற்பகல் 12.30 மணி வரையே நடைபெற்றது.

அனர்த்த நிலைமைகள் குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கால அவகாசம் வழங்குவதற்காக இவ்வாறு முன்கூட்டியே அமர்வுகள் நிறைவுக்குக் கொண்டு வரப் பட்டதற்கான காரணமாகும் என தெரிவிக்கப்படுகிறது. (செ-12)

# சிகிச்சை பலனின்றி இளைஞன் மரணம்

(கரணவாய்)

தொலைக்காட்சிப் பெட்டிக்கு வயர் இணைப்புக் கொடுக்க முற்பட்டபோது மின்தாக்கலுக்குள்ளான இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை காலை மரணமடைந்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் வெள்ளிருவை, அல்வாய் கிழக்கைச் சேர்ந்த இராசநாயகம் அஜந்தன் (வயது 20) என்பவரே மரணமடைந்தவராவார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் வீட்டில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிக்கு வயர் இணைப்பை கொடுக்க முற்பட்டபோது மின்சாரம் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த பிரஸ்தாப இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று காலையில் மரணமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

# தமிழகத்தில் அ.தி.மு.க வெற்றி...

கூட்டணி வாரியாக - முடிவுகள்

தொகுதிகள்-232/234 பெரும்பான்மைக்கு 118

| அணிகள் | முன்னிலை / வெற்றி |
|---|---|
| அதிமுக கூட்டணி | 134 |
| திமுக கூட்டணி | 98 |
| தேமுதிக - ம.ந.கூ | 00 |
| பாமக | 00 |
| பாஜக கூட்டணி | 00 |
| நாம் தமிழர் | 00 |

சாவடிகளில் வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணியுடன் நிறைவு வெற்றது.

தமிழகம் முழுவதும் இறுதி நிலைவரப்படி 232 தொகுதிகளிலும் 74.26 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளது. இந்த தேர்தலில் 4 கோடியே 28 லட்சத்து 73 ஆயிரத்து 674 பேர் வாக்களித்தனர்.

இந் நிலையில் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 68 மையங்களில் நேற்றுக் காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது.

வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடைபெற்று இரவு 8 மணி வரை இறுதி நிலைவரப்படி அ.தி.மு.க. கூட்டணி 134 தொகுதிகளையும், தி.மு.க. கூட்டணி 98 தொகுதிகளையும் (தி.மு.க. 89, காங்கிரஸ் 8, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 1) வசப்படுத்துகின்றன.

சென்னை ஆர்.கே.நகரில் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் ஜெயலலிதா 86 ஆயிரத்து 474 வாக்குகளுடன் வெற்றி பெற்றுள்ளார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் சிம்லா முத்துச் சோழனை 39 ஆயிரத்து 537 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கண்டுள்ளார்.

இதேவேளை 134 தொகுதிகளை கைப்பற்றிய அ.தி.மு.க வெற்றி பெற்றுள்ள நிலையில் தி.மு.க. கூட்டணி 98 இடங்களை கைப்பற்றி பலமான எதிர்க்கட்சியாக சட்டசபையில் உருவெடுத்துள்ளமை ஜெயலலிதாவினுடைய ஆட்சிக்கு சவாலான விடயமாகவே பார்க்கப்படுகின்றது.

மேலும் 1984-ம் ஆண்டுக்குப் பின்னர், ஆட்சியில் இருந்த கட்சி மீண்டும் தேர்தலில் தொடர்ந்து வென்று ஆட்சியைப் பிடிப்பது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது. (மேலும் செய்திகள் உள்ளே.) (செ-12)



தமிழக தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதலமைச்சராக பதவியேற்கவுள்ள செல்வி ஜெயலலிதாவின் வெற்றியை யாழ் எம்.ஜி.ஆர்.கோப்பாய் சுந்தரலிங்கம் யாழ் கல்வியங்காட்டில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் இன் சிலைக்கு மாலை அணிவித்து வெடி கொளுத்தி கொண்டாடினார். (செ-9)

# நிலச்சரிவில் காணாமல் போன...

வரை மீட்கப்பட்ட போதிலும், 200 குடும்பங்களின் கதி என்னவாயிற்று என்று தெரியவில்லை.

அதேவேளை, நேற்றுமுன்தினம் அதிகாலை, புலத்கொஹுபிட்டியவில் ஏற்பட்ட நிலச்சரிவில் 18 பேர் காணாமற்போயினர்.

மேற்படி இரண்டு இடங்களிலும், முழு வீச்சில் தேடுதல், மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முப்படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரண்டு நிலச்சரிவுப் பகுதிகளில் இருந்தும் 20 சடலங்கள் மாத்திரம் மீட்கப்பட்டுள்ளன.

அரநாயக்க பகுதியில் 134 பேர் காணாமற்போயிருப்பதாக அதிகாரபூர்வ தகவல்கள் கிடைத்துள்ளதாக, அந்தப்பகுதியில் மீட்புப்பணிகளுக்குப் பொறுப்பாக உள்ள மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

இதற்கிடையே, நாட்டில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் கொட்டிவரும் மழை, வெள்ளம், நிலச்சரிவு போன்றவற்றினால், பலர் பலியாகியுள்ளதாகவும், பெருமளவானோர் காணாமற் போயுள்ளதாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது. சுமார் மூன்றரை இலட்சம் மக்கள் பாதிக்கப்பட் டுள்ளனர்.

இதனிடையே, நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் சென்று பார்வையிட்டதுடன் பாதிகப்பட்ட வர்களையும் சந்தித்து ஆறுதல் கூறினர். (செ-12)

## கொள்ளையில் ஈடு...

பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

கடந்த இரு வருடங்களாக யாழில் கொள்ளையில் ஈடுபட்டு அப்பெண் பொலிஸாரிடம் சிக்காது மறைந்து வாழ்வதாக பொலிஸார் கடந்த சில தினங்களிற்கு முன்னர் ஊடகங்களிடம் குறிப்பிட்டிருந்தனர்.

இதன்போது இப்பெண் தொடர்பாக ஊடகங்களும் செய்திகளை வெளியிட்டிருந்தன.

கடந்த இரண்டு வருடங்களிற்கு பின்னர் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த சந்தேக நபரான 22 வயதுடைய குறித்த பெண் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நகரப் பகுதியில் உள்ள மற்றுமொரு இளைஞருடன் காதல் தொடர்பினை ஏற்படுத்தி திருமணம் வரையில் சென்றுள்ளார்.

இதன்போது சந்தேகமடைந்த குறித்த பெண்ணை காதலித்த நபர் அப்பெண்ணிடம் ஊடகங்களில் உங்கள் படம் அண்மையில் வந்ததாக குறிப்பிட்டு கேள்வியெழுப்பினார். இதன்போது அப்பெண் ஊடகங்கள் தவறாக தனது புகைப்படங்களை பிரசுரித்ததாக தெரிவித்துள்ளார்.


**வேலையாட்கள் தேவை**

கிளிநொச்சியில் உள்ள அசைவ உணவகத்திற்கு சகல விதமான வேலையாட்களும் தேவை.

(சாரதி உட்பட, தங்கி நின்று வேலை செய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு
077 7474 111

(C-4642)

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறையில் பிரதான வீதிக்கு அருகில் வல்லிபுரப்பரியாரியார் வீதியில் 12' பாதையுடன் கூடிய 5 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது, தரகர் தேவையில்லை உடன் தொடர்பு கொள்ளவும்

தொலைபேசி இலக்கம்:
076 678 1886

(C-4645)

English என்றால் அது
**Cambridge English** மட்டுமே

சர்வதேச அங்கீகாரமுள்ள ஒரே ஆங்கில மொழிச் சான்றிதழ்

KET பாடசாலைக் கல்வியை (O/L or A/L) நிறைவுசெய்தோருக்கானது
PET பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கானது
FCE தொழில் தேடுவோருக்கானது
IELTS வெளிநாடு செல்ல விரும்புவோருக்குரியது

அனுபமிக்க ஆசிரியர்களால் Audio –Video வசதிகளுடன் பயிற்சியளிக்கப்படுகிறது

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Week Batch & Weekend Batch

அனுமதிகளுக்கு: 077 3616 798

www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of ENGLISH

இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். (வைத்தியசாலை பின்புறம்)
பஸ் நிலையத்தில் இருந்து 100m

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

**பிரெஞ்சு மொழி**



- பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSYயின் கீழ் இயங்குகிறது.தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
- எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
- இலவசம்: படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
- யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்



ஆரம்பம் விரைவில், உடன் அழைத்துப் பதியவும்.
021 222 8093 எ, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(4712)


இதனால் சந்தேகமடைந்த இளைஞன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு அப்பெண்ணை பலவந்தமாக அழைத்துச்சென்று பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பெண் தற்போது தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு தான் கொள்ளையடித்த நகை தொடர்பான சகல விடயங்களையும் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் ஏமாற்றி கொள்ளையில் ஈடுபட்ட குறித்த இளம் பெண் தொடர்பான தகவல்களை உடனடியாக வழங்குமாறு பொதுமக்களை சுன்னாகம் பொலிஸார் வேண்டியிருந்ததுடன் இவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தால் 021 224 0323 என்ற தொலைபேசி ஊடாக தகவல்களை வழங்குமாறு கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## தனது பதவிக்குரிய...

வருவது தொடர்பாக ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஆளுநருடைய பேச்சுக்கள், அவருடைய செயற்பாடுகள் மற்றும் சில விடயங்களை பார்க்கும் விதம் என்பன சற்று வித்தியாசமாக இருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏனெனில் அவர் ஏற்கெனவே அரசியல்வாதியாக இருந்தவர். மேல் மாகாண முதலமைச்சராகவும் இருந்துள்ளார். அதனால் இங்குள்ள செயற்பாடுகளை அரசியல் ரீதியாக பார்த்துக் கொண்டிருக்கிறார்.

இவருக்கு முதல் இருந்த ஆளுநர் பள்ளியக்கார உண்மையில் ஒரு அரச உத்தியோகத்தர். இங்குள்ள விடயங்களை எவ்வாறு பார்க்க வேண்டும் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை நன்கு அறிந்து அதைப் போல செயற்பட்டார்.

அதற்காக இப்போதைய ஆளுநரை குறைசொல்வதில் ஒரு நன்மையும் ஏற்படாது. இது தொடர்பில் எமக்கிடையில் புரிந்துணர்வு ஏற்படவேண்டும். விரைவில் இவ்வாறான புரிந்துணர்வு ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. எவ்வாறு அது நடைபெறும் என்பதை என்னால் தற்போது கூறமுடியாது.

மேலும் இப்போதைய ஆளுநர் அவர் தனது பதவிக்குரிய செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை பற்றி அறிந்து கொண்டாலே ஆனால் எந்தவிதமாக சிக்கலும் ஏற்படாது என தெரிவிக்கும் அதேநேரத்தில் அவர் ஒரு நல்ல மனிதர் என்றும் கூறிக் கொள்ள விரும்புகிறேன் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## ஜெயலலிதாவுக்கு...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக முதல்வராக மீண்டும் தெரிவு செய்யப்பட்ட செல்வி ஜெயலலிதாவுக்கு என்னுடைய பாராட்டுதல்கள். அவர் வரும் காலத்தில் எம்முடன் இருந்து தமிழ் மக்களுக்கு நன்மை செய்வார் என்பதில் சந்தேகம் இல்லை.

தமிழ்நாட்டு மக்கள் அவரை மீண்டும் முதல் மந்திரியாக தேர்ந்தெடுத்தது அவருக்கு தமிழ் மக்களுக்கிடையில் இருக்கும் செல்வாக்கை பிரதிபலிக்கிறது. அவர் தமிழ் மக்களுக்காக தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என பிரார்த்திப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பாடசாலைகளு...

த்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள தொடர் மழை, காற்று, வெள்ளப் பெருக்கு, மண்சரிவு ஆகிய இயற்கை அனர்த்தங்களினாலேயே மாணவர்களின் பாதுகாப்பு கருதி இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## அனர்த்தத்தால்...

சரற்ற காலநிலை காரணமாக இலங்கையில் பல பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளம், மண்சரிவு மற்றும் ஏனைய அனர்த்தங்களினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், காணாமல் போனவர்கள், சொத்துக்களின் இழப்பு பற்றியும் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் ஆழ்ந்த மனவருத்தத்தினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்தோடு தற்போது ஏற்பட்டுள்ள இந்நிலைமைகளுக்கு முகம்கொடுக்க நேர்ந்ததில், பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கான நிவாரணப் பணிகளை ஏற்கெனவே கடற்படை, தரைப்படை, வான்படை ஆகிய முப்படைகளும், பொலிஸ் பிரிவும், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர் தமது உயிரை பணயம் வைத்து அர்ப்பணிப்புடன் செயற்படுவதை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

இந்நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் முப்படைகள், பொலிஸ் உள்ளிட்ட அரசின் அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் கௌரவமிக்க நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன். பொது மக்களின் நன்மதிப்பை பெறும் விதத்தில் மிகுந்த அர்ப்பணிப்புடன் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வரும் அரசு இந்த நிலைமைகளை கருத்திற்கொண்டு தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளையும் நாளை ஏற்படக் கூடிய நிலைமைகளைப்பற்றியும் எமக்கு கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் மூன்று வழிகளில் செயற்படுவதற்கு எண்ணியுள்ளோம்.

முதலாவதாக தற்போது ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான நிலைமைக்கு முகம்கொடுத்துள்ள மக்களுக்காக எம்மால் இயன்ற ஆக உச்சக்கட்ட நிவாரணங்களை பெற்றுக்கொடுத்தல். இரண்டாவதாக இந்த சீரற்ற காலநிலையுடன் மேன்மேலும் மழை அதிகரிக்குமாக இருப்பின் அதற்கு முகம்கொடுக்க தயாராகுதல். மூன்றாவதாக இந்த சீரற்ற காலநிலை அகன்று இயல்புநிலை ஏற்பட்டதன் பின்பு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள், சுகாதார வசதிகள், அடிப்படை வசதிகள் ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு அரசின் முன்னுரிமையை வழங்கி செயற்படுதல்.

இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அரசு மிகுந்த பொறுப்புடன் தமது கடமைகளை புரிந்து வருவதாக கூற வேண்டும். அத்துடன் நான் இன்னொரு விடயத்தையும் இங்கு கூற வேண்டும். இந்த அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உணவு, சுகாதார வசதிகள், தற்காலிக தங்குமிட வசதிகள் ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பதற்காக அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருப்பதுடன் நமது நாட்டின் பொது மக்கள், வர்த்தகத்துறையின் கொடையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய அனைவரிடமும் மிகுந்த கௌரவத்துடனும் பணிவுடனும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்களால் வழங்கக்கூடிய அனைத்து உதவிகளையும் வழங்க முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு என்ற வகையில் இந்நிலைமைக்கு முகம்கொடுப்பதற்காக எம்மாலான அனைத்து செயற்பாடுகளையும் குறைவின்றி முன்னெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம். ஆயினும் அநேகமாக இவ்வாறான பிரச்சினைகளின்போது எழுகின்ற குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள் ஆகியவற்றை தவிர்த்துக்கொள்வது இயலாத காரியமாகும். இருந்தபோதிலும் அக்குற்றச்சாட்டுக்களையும விமர்சனங்களையும் இயன்றளவு குறைத்துக் கொள்வதற்காக அரசு முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு, நான் ஏற்கெனவே கூறியதைபோன்று இந்நாட்டின் கொடையாளிகளிடமும் பொதுமக்களிடமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தம்மால் இயன்ற மிக உச்சக்கட்ட உதவிகளை செய்து ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அவ்வாறான நன்கொடைக்ள், உதவிகள் ஆகியவற்றை பெற்றுக்கொடுக்கும்போது உரிய செயற்பாட்டின் தேவை இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பான அனைத்து தகவல்களையும் ஒன்று திரட்டுவதற்காக மாவட்ட செயலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும் விசேட பிரிவொன்றினை ஸ்தாபித்துள்ளோம். அதன்மூலம் முறையான திட்டங்களை வகுத்து ஊழல்கள், மோசடிகள், முறைகேடுகள் ஏற்படாதவகையில் கிடைக்கின்ற நன்கொடைகளை நேரடியாகவே பொது மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் வேலைத் திட்டத்தினை ஏற்படுத்தியுள்ளோம்.

மேலும் எமது வெளிநாட்டு அமைச்சின் ஊடாக நாம் எமது நட்பு நாடுகளிடமும் உயர் ஸ்தானிகர்களிடமும் நமது நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியில் குறிப்பாக வீட்டு வசதி, சுகாதார வசதி மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு எமது நாட்டுக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளோம்.

அதற்கமைய ஏற்கெனவே பல நாடுகள் எமக்கு உதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளன. இவ்வனைத்து நாடுகளுக்கும் எனது கௌரவம் மிகுந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இந்த மீட்புப் பணிகளிலும் நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டிருக்கும் அனைத்து துறைகளையும் சார்ந்த அனைவருக்கும் நான் இவ்வேளையில் மீண்டும் நமது மக்களுக்காக நீங்கள் மேற்கொள்ளும் அர்ப்பணிப்புடனான உங்களது பணிகளுக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என ஜனாதிபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ-12)

## வெசாக் நிகழ்வு...

இந்த நிகழ்வில் வெசாக் தின கூடுகள், அலங்காரங்கள், பௌத்த மத படங்கள், வெசாக தோரணங்கள் என்பன பிரமாண்டமாக அமைக்கப்படவுள்ளதுடன் மிக பெரிய அன்னதான நிகழ்வுகளும் அன்றைய தினம் மாலை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எனவே இந்த நிகழ்வுக்கு பொதுமக்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு பாதுகாப்பு படைத்தலைமையகம் அழைப்பு விடுத்துள்ளது. (செ-9)

## தமிழர்களின் சுய...

செய்யும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கப்படும் என தொழிற் கட்சியின் தலைவர் ஜெர்மி கொர்பின் தெரிவித்துள்ளார்.

தமிழ் சமூகத்திற்கான நல்லிணக்கம், உண்மையை கண்டறிதல் மற்றும் நீதியை பெற்றுக்கொடுக்கும் முனைப்புக்களில் தொழிற் கட்சி பங்களிப்புச் செய்யும் என அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்றபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல தசாப்தங்களாக தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டிய ஜெர்மி ஈழத்தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்கான வழிகளை பிரிட்டன் அரசு ஏற்படுத்தி கொடுக்க முனைய வேண்டும் என வலியுறுத்தினார். (செ-12)


WESTERN UNION MONEY TRANSFER

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.